28th JULY 2024

www.uthayam.lk

# உதயம்

சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

உதயம்: 01 | இதழ்: 41 | பக்கங்கள் - 12 | editor.uthayam@gmail.com



## இந்த வாரத்துக்குள் அனுர கட்டுப்பணம்

தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் அதன் ஜனாதிபதி வேட்பாளருமான அனுர குமார திஸாநாயக்க 03ம் பக்கம்பார்க்க...



## ஜனாதிபதி வேட்பாளர் யார்?

**நாளை அறிவிக்கும் மொட்டு**

எதிர்வரும் ஜனாதி பதித் தேர்தலில் போட்டி யிட வுள்ள தமது கட்சி வேட்பாளர் யார் என்ற 02ம் பக்கம்பார்க்க...

## 10 அம்ச கோரிக்கைகளை ஏற்கும் வேட்பாளருக்கே

# எமது முழு ஆதரவு



அ.இ.ம.காங்கிரஸ் தலைவர் றிஷாத் திட்டவட்டம்!

பிரிந்து, பிளவுபடுத்துவோரையும் இணையுமாறு அறைகூவல்!! 04ம் பக்கம்பார்க்க...



# அனைவரையும் ஒன்றிணைத்து நாட்டை மீட்பதே என் பணி!

**ஒன்றாக வெல்வோம் காலி கூட்டத்தில் ரணில் விக்கிரமசிங்க**

ஜனாதிபதி தேர்தலில் தாம் போட்டியிடவுள்ளதாக மேடையில் அறிவித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, அதற்காக கட்டுப்பணம் கட்டியிருப்பதாகவும் தெரிவித்தார்.

காலி நகர சபை மைதானத்தில் நேற்று (27) நடைபெற்ற "ஒன்றாக வெல்வோம் - காலியில் நாம்" கூட்டத்தில் உரையாற்றும்போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

சவால்களில் இருந்து தாம் ஒருபோதும் பின்வாங்கவில்லை 11ம் பக்கம்பார்க்க...



## கூட்டணிக் கட்சிகளுடன் முதலாம் திகதி சஜித் பேச்சு

## 8ம் திகதி பரந்துபட்ட கூட்டணி

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் எதிர்வரும் 02ம் பக்கம்பார்க்க...

# தேர்தல் கண்காணிப்பு பணிகளுக்காக பல்வேறு சர்வதேச குழுக்கள்

**ஒரு குழு பணியில் மூன்று குழுக்கள் பங்கேற்பு**

**பெப்ரல் அமைப்பின் தலைவர் ரோஹண ஹெட்டியாராச்சி!**

(ஐ. ஏ. காதிர் கான் )

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் நடவடிக்கைப் பணிகள் தொடர்பில் பூரண அறிக்கைகளைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில், ஐ.நா. சபையின் சர்வதேச தேர்தல் கண்காணிப்புக் குழுவொன்று இலங்கை வந்துள்ளதாக, பெஃப்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் 02ம் பக்கம்பார்க்க...

# பொலிஸ் மா அதிபர் இடை நிறுத்தம்



**தேர்தல் பணிகளைப் பாதிக்காது!**

**மஹிந்த தேசப்பிரிய அதிரடி!!**

(ஐ. ஏ. காதிர் கான்)

"உயர் நீதி மன்றத்தினால் பொலிஸ் மா அதிபருக்குத் தடை உத்தரவு 02ம் பக்கம்பார்க்க...

அமானா வங்கியில்
வாகன நிதியுதவி



உங்கள் வாகனத்துக்குரிய சாவியை
மிகவும் குறைவான மாதாந்த
தவணைக்கொடுப்பனவுகளில் பெற்றுக்கொள்ளுங்கள்

ரூ. 2,085/-
ரூ.100,000க்கு வாடகை*

- மிகக்குறைந்த மாதாந்த தவணைக்கட்டணம்
- 7 ஆண்டுகள் வரையான மீள்செலுத்தும் காலம்
- 24 மணித்தியாலத்திற்குள் அங்கீகாரம்

விண்ணப்பிக்க ஸ்கேன் செய்யவும்

விதிமுறைகளும் நிபந்தனைகளும் பொருந்தும்*

அழையுங்கள் 011 7 756 756 | www.amanabank.lk

இது உங்கள் வங்கி Amãna Bank

## இந்த...

**(முன் பக்கத் தொடர்ச்சி)**

அடுத்து வரும் தினங்களில் தமது கட்டுப் பணத்தை செலுத்தவுள்ளதாக அக் கட்சியின் செயலாளர் டில்வின் சில்வா தெரிவித்தார்.

நாடு முழுவதும் தேர்தல் பிரச்சாரப் பணிகளை முன்னெடுக்க விரிவான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் அனுர குமார திஸாநாயக்க இந்த போட்டியில் வெல்வது நிச்சயம் என்றும் குறிப்பிட்டார்.

## தேர்தல்...

**(முன் பக்கத் தொடர்ச்சி)**

பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாரச்சி தெரிவித்துள்ளார்.

இக்கண்காணிப்புக் குழுவினரின் பிரதிநிதிகள், பெவ்ரல் அமைப்பின் அதிகாரிகளைச் சந்தித்து ஜனாதிபதித் தேர்தல் நிலைப்பாடு தொடர்பில் கலந்துரையாடியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், தற்போது சூடுபிடித்துள்ள அரசியல் கள நிலவரங்களை மதிப்பீடு செய்து, அவற்றின் அறிக்கைகளை இக்குழுவினர் தாம் பிரதிநிதித்துவப்படுத்தும் வெளிநாட்டு தேர்தல் கண்காணிப்பு மத்திய நிலையங்களுக்கு அனுப்பி வைப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மேலும் மூன்று சர்வதேச தேர்தல் கண்காணிப்புக் குழுவினர் விரைவில் இலங்கை வரவிருப்பதாகவும் ஹெட்டியாரச்சி குறிப்பிட்டுள்ளார்.

இது தவிர, பெவ்ரல் அமைப்பினால் தயாரிக்கப்பட்டுள்ள தேர்தல் விஞ்ஞாபனத்தை, ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடத் தயாராகவுள்ள மூன்று பிரதான அரசியல் கட்சிகளினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதுடன், அங்கு குறிப்பிடப்பட்டுள்ளவாறு தேர்தல் பணிகளை நடைமுறைப்படுத்துவதற்கு, அம் மூன்று கட்சிகளினாலும் இணக்கம் தெரிவிக்கப்பட்டிருப்பதாகவும் பெவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாரச்சி மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

அசர வேகத்தில் வலம் வந்து கொண்டிருக்கும் உதயம் பத்திரிகையில் உங்களது நிறுவனங்களின் விளம்பரங்களை பிரசுரிக்க வேண்டுமாயின் தொடர்புகளுக்கு:
070 239 7210

## கூட்டணிக்...

**(முன் பக்கத் தொடர்ச்சி)**

முதலாம் திகதி கட்சிகளின் தலைவர்களுடன் விஷேட பேச்சுக்களை நடாத்த ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் ஜனாதிபதி வேட்பாளருமான சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

தீர்க்கமான இப் பேச்சுவார்த்தைகளின் பின் ஆகஸ்ட் 8 ஆம் ஐக்கிய மக்கள் சக்தியின் பரந்து பட்ட கூட்டணியொன்றினை அமைப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## ஜனாதிபதி...

**(முன் பக்கத் தொடர்ச்சி)**

தீர்க்கமான முடிவு நாளை அறிவிக்கப்படுமென தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் நிறைவேற்றுக் குழு நாளை திங்கட்கிழமை கூடவுள்ளதாகவும் ஏற்கெனவே வேட்பாளராக போட்டியிடுவதற்காக விருப்பம் தெரிவித்துள்ளோரின் வெற்றி வாய்ப்புக்கள் குறித்து கட்சி மட்டத்தில் விரிவாக கலந்துரையாடி இறுதி முடிவு எட்டப்படுமென்றுமா அவர் மேலும் தெரிவித்தார்.

## பொலிஸ்...

**(முன் பக்கத் தொடர்ச்சி)**

பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில், ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு எவ்விதத் தடையும் இல்லை" என, தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மஹிந்த தேசப்பிரிய அதிரடியாகத் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று (27) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது,

நடத்துவது தொடர்பான பணிகள் இருப்பின், தேர்தல் விவகாரங்களுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபருடன் தொடர்பு கொண்டு அதனை மேற்கொள்ள முடியும்.

ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு, நாட்டில் எந்தத் தடையும் இல்லை. தற்போது பாதுகாப்புப் பணிகள் முறையாக நடந்து வருகிறது. பொதுப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஊடாக அந்தச் செயற்பாடுகளை ஒருங்கிணைக்க முடியும். இதனையடுத்து, ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் செப்டம்பர் மாதம் 21 ஆம் திகதி திட்டவட்டமாக நடைபெறும்" என அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.







# முன்னாள் நிதியமைச்சர் மர்ஹூம் எம். எம். முஸ்தபா

## நினைவு முத்திரையும், அவரது பாராளுமன்ற உரைகள் அடங்கிய நூலும் வெளியீடு!













நிந்தவூரைச் சேர்ந்த முன்னாள் நிதியமைச்சர் மர்ஹூம் எம். எம். முஸ்தபா அவர்களின் நினைவாக அன்னாருக்கு நூறு வயதையொட்டி நூற்றாண்டு நிறைவை நினைவுகூரும் வண்ணம் தபால் திணைக்களம் நினைவு முத்திரையும் அவர் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரைகள் அவரது குடும்ப உறுப்பிணர்கள் மற்றும் ஜனாதிபதி மற்றம் அரசியல்வாதிகள் அடங்கிய உரைகள் நூலும் வெளியீட்டு வைக்கப்பட்டது. இவ் வைபவத்தினை முஸ்தபா பௌன்டேசன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

முஸ்தாவின் புதல்வர்கள், புதல்விகள், மற்றும் பேரப் பிள்ளைகள் அடங்கிய முஸ்தபா பௌன்டேசனால் இவ் வைபவம் எற்பாடு செய்யப்ட்டிருந்தது. ஜனதிபதியின் சார்பாக பிரதம மந்திரி தினேஸ்குணவர்த்தன, ஜனாதிபதியின் செயலாளர் அமைச்சர் பந்துல குணவர்த்தன ,நிதி யமைச்சர் கலாநிதி விஜயதாச ராஜபக்ச, பவித்ரா வண்ணியராச்சி, வெளிநாட்டு அமைச்சர் அலி சப்ரி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவுப் ஹக்கீம், முன்னாள் அமைச்சர் றிசாத் பதியுத்தீன், மற்றும் பாராளுமன்ற உறுப்பிணர்களான வஜிர அபேவர்த்தன, பைசால் காசீம் உட்பட முஸ்தபாவின் குடும்ப உறவினர்கள் பலநாடுகளிலிருந்தும் வந்து கலந்து கொண்டனர்

இங்கு முஸ்தபா பற்றிய பிரதான உரை உயர் நீதிமன்ற நீதியரசர் ஏ.எச். எம்.டி நவாஸ் ஆற்றினார் முன்னாள் அமைச்சர் முஸ்தபா சார்பாக நவாஸ் முஸ்தபா மற்றும் பேரரான கலாநிதி செஹான் முஸ்தபாவும் உரையாற்றினார்கள்.

முதல் தபால் உரைய அமைச்சர் பந்துல குணவர்த்தனவின் பிரதம மந்திரிக்கு கையளிக்கப்பட்டு குடும்ப உறுப்பிணர்களுக்கு வழங்கப்பட்டது.


## மணமகள் தேவை

அமெரிக்க பிரஜாவுரிமையுடன், அமெரிக்காவில் தொழில்புரிந்து வசித்துவரும் திஹாரிய பிரதேசத்தைச் சேர்ந்த 49 வயதுடைய விவாகரத்து பெற்ற, பிள்ளைகளற்ற ஒருவருக்கு முஸ்லிம் மணமகள் (பிள்ளைகளற்ற) ஒருவர் தேவை. இலங்கை வந்து திருமணம் செய்துவிட்டு மணமகளை அமெரிக்காவிற்கு அழைத்துச் செல்லவுள்ளார்.
மேலதிக தகவல்களுக்கு:
070 239 7210 எனும்
வட்ஸ்அப் இலக்கத்தினூடாக தொடர்புகொள்ளவும்.






AMAZON COLLEGE
294, 2nd Floor, Galle Road, Colombo 04, Sri Lanka
+94114 386 126 | info@amazoncollege.lk
/amazoncollegelk | www.amazoncollege.lk




www.uthayam.lk
உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்
2024 JULY 28 - MONDAY
WEB: www.uthayam.lk
E-mail: editor.uthayam@gmail.com
FB ID: உதயம்

# மன்னித்தால் மட்டும் போதுமா

கொரோனா தொற்றின் போது பலவந்தமாக முஸ்லிம் ஜனாஸாக்களை எரித்தமைக்காக அரசாங்கம் முஸ்லிம்களிடம் மன்னிப்புக் கோரியுள்ளது இது தொடர்பாக அமைச்சரவையில் ஆராயப்பட்டு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

கொவிட் 19 இனால் உயிரிழந்த முஸ்லிம்களின் எண்ணிக்கை 276 ஆகும். இதுவரை காலமும் மறைத்து வைக்கப்பட்டுள்ள எண்ணிக்கை இப்போதே வெளியிடப்பட்டுள்ளது. நிலத்தடி நீர்மூலம் கொவிட் வைரஸ் பரவும் என்று கூறியே குறித்த 276 ஜனாஸாக்களும் எரிக்கப்பட்டன.

இஸ்லாம் ஜனாஸாக்களை எரிப்பதனை அனுமதிப்பதில்லை அப்படியிருக்க முஸ்லிம்களும் முஸ்லிமல்லாதவர்களும் தெரிவித்த பலத்த எதிர்ப்புக்கு மத்தியில் முஸ்லிம்களின் ஜனாஸாக்கள் எரிக்கப்பட்டன. 20 மாத குழந்தை உட்பட 276 ஜனாஸாக்களை உரித்தானவர்கள் மட்டுமின்றி முழு நாட்டு முஸ்லிம்களும் தமக்கு நடந்த அநீதிக்காக இன்னும் கண்ணீர் விட்ட வண்ணம் உள்ளனர். தாமதித்தேனும் அரசாங்கம் குறித்த குடும்பங்களிடம் மன்னிப்பு கோரியுள்ளது.

மன்னிப்போடு நின்று விடாது யார் யார் இதற்கு பொறுப்பாக இருந்தார்களோ அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதே முஸ்லிம் சமூகத்தின் கோரிக்கையாகும். இந்த விடயத்தில் இவ்வளவு காலமும் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு ஜனாதிபதி தேர்தல் நடக்கவுள்ள நிலையில் அரசாங்கம் மன்னிப்புக் கோரும் தீர்மானத்தை எடுத்துள்ளது. அரசின் மன்னிப்பு கோரும் இத் தீர்மானம் வெளியானதும் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி தரப்பினர் அரசிடம் கேள்விகளை எழுப்பிள்ளர்.

குற்றவாளிகள் யார் என தெளிவுபடுத்தப்பட வேண்டும், சம்பந்தப்பட்டவர்கள் தண்டிக்கப்பட வேண்டும், உரிய முறையில் நஷ்ட ஈடு வழங்கப்பட வேண்டும் என்பன எதிர்க்கட்சிகள் விடுத்துள்ள கோரிக்கைகளாகும். அரசாங்கம் இந்த கேள்விகளுக்கு பதில் வழங்கி எதிர்காலத்தில் இவ்வாறான தீர்மானங்கள் எடுக்காதிருப்பதற்கான உறுதிப்படுத்திய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

தேர்தல் நெருங்கியுள்ள நிலையில் இவ்வாறு மன்னிப்பு கோரி அமைச்சரவை பத்திரம் சமர்ப்பித்திருப்பது நேர்மையான ஒரு செயற்பாடல்ல அது ஒரு கண்துடைப்பு என்று எழுப்பப்படும் குற்றச்சாட்டுகள் குறித்தும் அரசு என்ன கூறப்போகின்றது. உலக சுகாதார ஸ்தாபனத்தின் வழிகாட்டலையும் மீறியே ஜனாஸாக்கள் எரிக்கப்பட்டன. முஸ்லிம் சமூகத்திடம் பழிவாங்கும் நோக்கத்தில் இது செய்யப்பட்டதா என்றும் சந்தேகம் எழுப்பப்படுகின்றது.

பாராளுமன்றத்தில் இது தொடர்பாக இடம்பெற்ற விவாதத்தில் பேசிய சபை முதல்வரும் கல்வி அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த அன்று அமைச்சரவையில் இருந்தவர்கள் இதற்கு ஆதரவு தெரிவித்து கையை உயர்த்தியது பற்றி குறிப்பிட்டுள்ளார். பல முஸ்லிம் சமூகத்தின் வாக்குகளைப் பெற்ற பெற்ற பல பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவானவர்களாவார்கள். எதிர்காலத்தில் ஆதரவு கோரி செல்லப் போகிறார்கள்.

இதே நேரம் எதிர்வரும் காலங்களில் இறந்த தமது உறவினர்களின் மதச் சடங்குகளுக்கு அமைய நல்லடக்கம் மற்றும் தகனம் செய்வது தொடர்பாக சட்டமூலம் ஒன்றை அரசு அமலுக்கு கொண்டுவரும் என தெரிவித்துள்ளது. முஸ்லிம் சமூகம் நாட்டின் பல பிரச்சினைகளை எதிர்நோக்கி இருக்கிறார்கள். இந்த பிரச்சினைகளுடன் ஜனாஸாக்களை அடக்குவது தொடர்பாக தெளிவான உறுதியான சட்டத்தை அரசு அமுலுக்கு கொண்டு வரவேண்டும். முஸ்லிம் அரசியல் தலைமைத்துவம் இந்த விடயத்தில் கட்சி பேதங்களை மறந்து ஒரு தெளிவான நிலைப்பாட்டை எடுத்து பகிரங்க மன்னிப்பு கோரலுக்கு தெளிவான பதிலை வெளியிட வேண்டும். இந்த விடயத்தில் அப்போதைய அரசினை யாராவது தவறாக வழிநடத்தி இருந்தால் அவர்களை அடையாளம் கண்டு பகிரங்கப்படுத்தி எதிர்காலத்தில் யாரும் இவ்வாறான இனவாத நோக்கிலான தீர்மானங்களை எடுப்பதனை தவிர்க்க வேண்டும்.

ஆயிரம் வருடங்களுக்கு மேல் இந்த நாட்டில் வாழ்ந்து வரும் முஸ்லிம்களுடனான உறவில் ஒரு கசப்பான ஒரு பதிவாகவே இந்த ஜனாஸா எரிப்பு இடம்பெற்று இருக்கின்றது என்பதனை குறித்து சுட்டிக்காட்ட வேண்டும்.

# ஜனாஸா எரிப்பு விவகாரம்;
# விசாரணை ஆணைக்குழு கோரிக்கைக்கு திருப்தியற்ற பதில்



கொவிட் தொற்றினால் இறந்தவர்களின் உடல்களை தகனம் செய்வது தொடர்பாக முடிவெடுத்த குழு தொடர்பாக பக்கச்சார்பற்ற விசாரணை நடத்தவும், பாதிக்கப்பட்ட இலங்கை வாழ் முஸ்லிம் சமூகத்தின் மனங்களை சாந்தப்படுத்தவும் ஜனாதிபதி ஆணைக்குழுவை அடுத்த ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் உடனடியாக நியமிக்க வேண்டும். தகனம் மூலம், அநியாய சம்பவத்தை செய்த குழுவுக்கு எதிராக சட்டத்தை அமுல்படுத்த வேண்டும் என முஸ்லிம் சமூகத்தின் சார்பில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு நான் அனுப்பிய எழுத்துமூல மகஜருக்கு ஜனாதிபதி செயலகம் அனுப்பியுள்ள பதில் திருப்தியளிக்க வில்லை என ஜனாதிபதி செயலணி முன்னாள் உறுப்பினரும், கொழும்பு மாநகர சபை முன்னாள் உறுப்பினருமான ஐ.ஏ. கலீலுர் ரஹ்மான் ஊடக அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.

அவரது அறிக்கையில் மேலும், பூகோள அரசியல் சதிக்காக உடல்களை தகனம் செய்ய முடியும் என்ற முடிவை ஒரு சிறு குழுவினர் எடுத்தார்கள் என்றால் அவர்களின் பின்னால் கண்ணுக்குத் தெரியாத சக்தி இருக்கிறதா என்று கண்டுபிடிப்பது நாட்டுக்கு நல்லது. ஏனெனில் நாடளுமன்ற உறுப்பினர்களான விமல் வீரவன்ச மற்றும் உதய கம்மன்பில போன்ற கடும்போக்கு சிந்தனை கொண்டவர்கள் ஜனாஸாக்களை அடக்கம் செய்வதற்கு ஆதரவாக நின்ற போது அதே அரசாங்கத்தின் மற்றுமொரு தரப்பு எதிர்த்தாக பாராளுமன்ற உறுப்பினர்களான வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி மற்றும் விமல் வீரவன்ச ஆகியோர் பாராளுமன்றத்தில் தெரிவித்த கருத்தை சாதாரணமாக கடந்து செல்லவோ அல்லாதது நிராகரிக்கவோ முடியாது. அத்துடன், பேராசிரியர் மெத்திகாவுக்கு எதிராக பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி மற்றும் பல பாராளுமன்ற உறுப்பினர்களால் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டை நிராகரிக்கவும் முடியாது.

நீர்வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சர் ஜீவன் தொண்டமான் தனது அமைச்சின் ஊடாக மேற்கொண்ட ஆய்வு அறிக்கையில் கொரோனா வைரஸ் நீரினால் பரவுவதில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், கொரோனா சடலங்களை அடக்கம் செய்ய வேண்டும் என்ற கருத்தை முன்வைத்த குழுவின் அறிக்கைக்கு சிங்கள தேசியவாத முகாமை பிரதிநிதித்துவப்படுத்திய மெதகொட அபயதிஸ்ஸ தேரர், கலகொட அத்தே ஞனசார தேரர், விமல் மற்றும் கம்மன்பில எம்.பி.க்கள் ஆதரவாக இருந்தால், பேராசிரியர் மேத்திகா பிரதிநிதித்துவப்படுத்தும் குழு ஏன் ஜனாஸாக்களை நல்லடக்கம் செய்வதை எதிர்த்தது?

முஸ்லிம் ஜனாஸாக்கள் தகனம் செய்யப்பட்டமை இந்த நாட்டில் முஸ்லிம் சமூகத்திற்கு அநீதி இழைத்தது என்பதையே அப்பட்டமாக வெளிக்காட்டுகிறது. இதுவரை பல்வேறு தரப்பினராலும் வெளியான கருத்துகள் அனைத்தும் உண்மைகளையே உணர்த்துகின்றன. இந்த அநியாயம் முஸ்லிம் சமூகத்தின் இதயங்களை கடுமையாக தாக்கியுள்ளதுடன் நிகழ்காலத்திற்கு மட்டுமல்ல எதிர்காலத்திற்கும் பரப்பக்கூடிய ஒரு கருத்தியல் ஆயுதமாக அரசியல் மேடையில் இந்த விடயம் உள்ளது.

இவற்றை கவனத்தில் கொண்டு கொரானாவின் சடலங்களை தகனம் செய்வது தொடர்பாக ஜனாதிபதி ஆணைக்குழுவை நியமிக்குமாறு இலங்கை முஸ்லிம் சமூகத்தின் சார்பாக 23/06/2024 அன்று நான் எழுதிய உருக்கமான இரண்டு பக்க கடிதத்தில் என்னைக் சாதாரண குடிமகன் போன்று கருத்தில் கொண்டு கௌரவ ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்களின் ஜனாதிபதியின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் (பொது உறவுகள்) திரு. டபிள்யூ. எம். பாத்தியா விஜயந்த அவர்கள் ஜனாதிபதி செயலாளருக்குப் பதிலாக என ஒப்பமிட்டு அனுப்பிய மூன்று வார்த்தைகள் கொண்ட பதில் கடிதம் எனக்கோ அல்லது முஸ்லிம் சமூகத்திற்கோ திருப்தியானதாக இல்லை.

ஏனென்றால், ”கோவிட் இறந்த உடல்களை தகனம் செய்வது குறித்து” என்ற வார்த்தை கூட இல்லாமல் ”கருத்துகள் மற்றும் பரிந்துரைகள்” என்று மட்டுமே கடிதம் பதிவு செய்யப்பட்டுள்ளதால் நான் மிகவும் வருத்தப்பட்டேன். இந்த பதில் கடிதத்தின் இறுதியில் கூறப்பட்டுள்ளபடி, அதாவது இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீது நான் வைக்கும் ”நம்பிக்கை” அப்படியே உள்ளது எனவே கொவிட் சடலங்களை தகனம் செய்தமை தொடர்பாக ஜனாதிபதி ஆணைக்குழுவை நிறுவ மீண்டும் கோரிக்கை விடுக்கிறேன் என தெரிவித்துள்ளார்.

## 10 அம்ச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி தேர்தலில் ஆதரவுகள் வழங்குமாறு கோரி அழைப்புகள் விடுக்கப்பட்டு வருகின்றன.

எமது கட்சி 10 அம்ச கோரிக்கைகளை முன் வைத்திருக்கின்றன. இவற்றை முழுமையாக ஏற்றுக் கொண்டு அதனை செயல்படுத்த முன் வருகின்ற அணிக்கு எங்களது ஆதரவை வழங்குவது தொடர்பில் நாங்கள் தீர்மானிப்போம்.

என புத்தளத்தின் கொழும்பு முகத் திடலில் நேற்று சனிக்கிழமை நடைபெற்ற எழுச்சி மாநாட்டில் உரையாற்றிய அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் றிஷாத் பதியுதீனுடன் திட்டவட்டமாக தெரிவித்தார்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் கட்சியின் தலைவர்களில் ஒருவருமாகிய எம்.எச்.எம்.தலைமலயில் நடைபெற்ற இக் கூட்டத்தில் கட்சியின் தவிசாளர் முன்னாள் பிரதியமைச்சர் எம்.எஸ்.எஸ். அமீர் அலி, கட்சியின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் பிரதியமைச்சருமான எம். எச்.எம் மஹ்ரூப், சட்ட ஆலோசகர் சிரேஷ்ட சட்டத்தரணி ருஸ்தி ஹபீப் உட்பட கட்சியின் முக்கிய பிரமுகர்களும் ஆயிரக்கணக்கான ஆதரவாளர்களும் இக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

இங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்று பிரிந்து நின்றும் பிரதேச வாதம் பேசியும் பிளவுகளை தோற்றுவிப்பதற்கு முயற்சித்தவர்களுக்கு நாம் பகிரங்க அழைப்பு விடுக்கின்றோம்.

புத்தளம் சமூகத்தின் இந்த எதிர்காலத்திற்காக உங்களது கருத்து முரண்பாடுகள் எல்லாவற்றையும் வீசிவிட்டு எங்களோடு வந்து இணைந்து கொள்ளுங்கள் உங்களை அரவணைப்பதற்கு நாங்கள் காத்திருக்கின்றோம் ஆனால் இந்த நாட்டில் முஸ்லிம் சமூகத்தை மிகவும் மோசமாக பார்ப்பதற்கு காரணமாக இருந்த தங்கக் கடத்தலுடன் தொடர்புபட்ட அந்த பாராளுமன்ற உறுப்பினரை தவிர வேறு எவரையும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் அரவணைத்துச் செல்வதற்கு தயாராக இருக்கிறது அவருக்கு எமது கட்சியில் எந்த இடமும் ஒருபோதும் வழங்கப்பட மாட்டாது என்பதை இந்த புத்தளம் மண்ணில் இருந்து பகிரங்கமாக கூறிக் கொள்ள விரும்புகின்றேன்

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் இன்று புத்தகத்தில் பலம் பெற்று வருகிறது, கடந்த தேர்தலில் 56 ஆயிரம் வாக்குகளை பெற்று ஒரு பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தைப் பெற்றுக் கொள்ள முடிந்தது. ஆனால், எதிர்வரும் தேர்தலில் 66,000 வாக்குகளை பெற்று இரு பாராளுமன்ற உறுப்பினர்களை புத்தகம் சமூகம் வரப்போகிறது என்கின்ற செய்தியை இன்று நான் கூறிக் கொள்ள விரும்புகின்றேன் - என்றார்.




# சாதிக்கத் துடிக்கும் சாமானியன் சஹ்மியின் சாதனைப் பயணம்

(பீ.எம் முக்தார்)

வரலாற்றில் முதற்தடவையாக, அசாத்திய முயற்சியை மேற்கொண்டு, நடைப்பவணியாக நாட்டை சுற்றும் சஹ்மி சஹீதின் சாதனைப் பயணம் 15ஆவது நாள் கடந்தும் தொடர்கின்றது.

நடந்தே நாட்டை சுற்றி வரும் நோக்குடன் கடந்த 13 ஆம் திகதி பேருவளையில் ஆரம்பிக்கப்பட்ட இளம் யூடியூப்பர் சஹ்மி ஷஹீதின் சாதனை நடைபவணி ஒரிரு நாளுக்கு முன்னர் கிழக்கினை வந்தடைந்தது.

பேருவளையில் இருந்து காலி வீதி ஊடாக மாத்தறை, ஹம்பாந்தோட்டை, வெல்லவாய, மொனராகலை, பொத்துவில் மற்றும் அக்கரைப்பற்று, நிந்த10ர் ஆகிய பிரதேசங்களுக்கு நேற்றுரை சென்றடைந்திருந்தார்.

தன்னம்பிக்கையுடனும், அசாத்தியத் துணிவுடனும் தன் சாதனை பயணத்தை தொடரும் இவருக்கு பல பிரதேசங்களில் உள்ளவர்களும் அமோக வரவேற்பளித்து ருகின்றனர். அத்துடன் ஸஹ்மியின் தேவைகருதி பெறுமதியான கேமரா ஒன்றும் அக்கரைப்பற்றின் பிரதேசவாசி ஒருவரினால் இதன்போது அன்பளிப்பு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து தன் பயணத்தை தொடர்ந்த இவர் யானைகள் அச்சுறுத்தல்கள் நிறைந்த காட்டு வழி பாதைகளில் கூட தைரியமாகவும் இறைநம்பிக்கையுடனும் தனியாக சென்றமை குறிப்பிடத்தக்கது.

ஸஹ்மிஇ இச்சாதனை பயணத்தை வெற்றிகரமாக முடித்து வரலாற்று சாதனை செய்வதற்காக இவரது முழுச்செலவினையும் பிரபல தொழிலதிபரும் சிமி ஹோல்டிங் (பிரைவேட் லிமிடெட்) நிறுவன ஸ்தாபகருமான இஜ்லான் யூசுஃப் அவர்கள் பொறுப்பேற்றமையும் இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும்.

அடுத்த கட்டமாக இவரது வரலாற்றுச்சாதனை பயணம் திருகோணமலை, முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், மன்னார், அனுராதபுரம்மற்றும் புத்தளம் ஊடக கொழும்பு, களுத்துறை வந்து பேருவ ளையை சென்றடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# அல்குர்ஆன் உங்கள் இதயத்துடன் பேசுகிறது....

(இப்னு தவ்பீக் ஆலீம்)

"(நம்பிக்கையாளர்களே!) எவர்கள் தங்கள் பொருளை (பிறருக்கு உதவிடும் நோக்கில்) இரவிலும் பகலிலும் இரசியமாகவும் வெளிப்படையாகவும் செலவு செல்கின்றார்களோ அவர்களுக்குரிய கூலி அவர்களின் இறைவனிடம் அவர்களுக்கு உண்டு, தவிர அவர்களுக்கு (மறுமையில்) எவ்வித பயமும் இல்லை. அவர்கள் துக்கப்படவும் மாட்டார்கள், (2:274)

**வட்டி வாங்கி தின்பவர்களின் நிலை-**

"வட்டி (வாங்கித்) தின்பவர்கள் ஷைத்தான் பிடித்து பித்தம் கொண்டவர்கள் எழும்புவது போலன்றி. வேறு விதமாக மறுமையில்) எழும்பமாட்டார்கள். காரணமாவது "வட்டியைப் போலவே நிச்சியமாக வணிகமும் இருக்க அல்லாஹ் வணிகத்தை ஆகுமாக்கி, வைத்து வட்டியை (ஏன்) தடுத்துவிட்டான்? என்று அவர்கள் (பரிகாசமாக) கூறியது தான்(வட்டி வாங்கக் கூடாது என்று) இறைவனிடமிருந்து வந்த அறிவுரைப்படி யாராவது) (உங்களில் அதைவிட்டு விலகிக் கொண்டால் (அதற்கு) முன் (அவர் வாங்கிச்) சென்று போனது அவருக்குரியதே. (இதற்கு முன் வட்டி வாங்கிய) அவருடைய விஷயம் அல்லாஹ்விடமிருக்கிறது (அல்லாஹ்வின் உத்தரவு வந்ததன் பின் வட்டியை விட்டுவிட்டால் அல்லாஹ் அவரை மன்னித்து விடலாம்) தவிர (இந்த உத்தரவு கிடைத்த பின்) எவரேனும் பிறகும் (வட்டியின் பக்கம்) திரும்பினால் அவர்கள் நரகவாசிகளே அதி□ல் அவர்கள் என்றென்றும் தங்கி விடுவங்கள். (2:275)

அல்லாஹ் வட்டியை அழித்து தர்மங்களை வளர்க்கின்றான், மேலும் (தன் கட்டளையை) நிராகரித்துக் கொண்டே இருக்கும் பாவிகள் அனைவரையும் அல்லாஹ் நேசிப்பதில்லை. (2:276)

**நம்பிக்கையும் நற்செயலும் -**

எவர்கள் நம்பிக்கை கொண்டு நற்செயல்களைச் செய்து தொழுகையைக் கடைப்பிடித்து மார்க்க வரியையும் (ஸகாத்து) கொடுத்து வருகின்றார்களோ அவர்களுக்குரிய கூலி அவர்களின் இறைவனிடம் அவர்களுக்கு உண்டு. அன்றி அவர்களுக்கு (மறுமையில்) எவ்வித பயமும் இல்லை, அவர்கள்ழ துக்கப்படவும் மாட்டார்கள் (2277)

**வட்டியை விட்டு கொடுத்தல்!**

"நம்பிக்கையாளர்களே! நீங்கள் (உண்மையாகவே) நம்பிக்கையாளர்களாக இருந்தால் அல்லாஹ்வுக்கு பயந்து வட்டியில் (இது வரை வாங்கியது போக மீதமிருப்பதை (வாங்காமல்) விட்டுவிடுங்கள்." (2:278)

**வட்டி வாங்கியது பற்றி மனம் வருந்தி**

இவ்வாறு நீங்கள் நடந்து கொள்ளாவிடில் அல்லாஹ்வுடனும் அவனுடைய தூதருடனும் போர் செய்யத் தயாராகி விடுங்கள். ஆயினும் நீங்கள் (வட்டி வாங்கியது பற்றி மனம் வருந்தி திருந்தி) பாவ மன்னிப்பு கோரினால் உங்கள் பொருள்களின் அசல் தொகை உங்களுக்கு உண்டு (எரும் அதை எடுத்துக்கொண்டு) உங்களுக்கு அநியாயம் செய்துவிட முடியாது. (அவ்வாறே) நீங்களும் (வட்டிவாங்கி) அநியாயம் செய்தவர்களாக மாட்டீர்கள்! (2:279)

**கடனை மீட்ட முடியாதவர்கருக்கு ...**

அன்றி (கடன் வாங்கியவன் அதனைச் தவணைப்படி தீர்க்க முடியாமல்) அவன் கஷ்டத்தில் இருந்தால் (அவனுக்கு) வசதி ஏற்படும் வரையில் எதிர்பாத்திருங்கள். மேலும் (இதிலுள்ள நன்மைகளை) நீங்கள் அறிந்தவர்களாக இருந்தால் (அதை அவனுக்கே) நீங்கள் தானம் செய்து விடுவது (பிறருக்கு தானம் செய்வதைவிட உங்களுக்கு மிகவும் நன்மையாகும். (2:280)

# திறந்த ஜாமிஆ தினம், திறந்த மஸ்ஜித் நிகழ்வு



(பீ.எம். முக்தார்)

'திறந்த ஜாமிஆ தினம் மற்றும் திறந்த மஸ்ஜித்' நிகழ்வு ஜாமிஆ வளாகத்தில் அண்மையில் நடைபெற்றது.

ஜாமிஆ நளீமிய்யா கலாபீடத்தின் வரலாற்றில் மற்றொரு மைல்கல்லாக நோக்கப்படும் இந்நிகழ்வு பல்லின சமயத்தவர்கள் வாழும் இலங்கை போன்ற ஒரு நாட்டில் சமூகங்களுக்கிடையிலான பரஸ்பர புரிந்துணர்வைக் கட்டியெழுப்புவதில் மிகப்பெரும் பங்கை வகிக்கும் எனக் கருதப்படுகிறது.

ஜாமிஆ நளீமிய்யாவின் ஒரு பிரிவான சமாதானத்துக்கும் உரையாடலுக்குமான ஸலாம் நிலையம், இஸ்லாமிய கற்கைகளுக்கான மத்திய நிலையத்துடன் இணைந்து ஒழுங்கு செய்திருந்த இந்நிகழ்வில் முஸ்லிம்கள் அல்லாத ஏனைய மதங்களைச் சேர்ந்த 300 க்கும் அதிகமானோர் கலந்து கொண்டிருந்தனர்.

இந் நிகழ்வின் ஆரம்ப வைபவம் நளீமிய்யா கலாபீடத்தின் முதல்வர் உஸ்தாத் ஏ.ஸீ. அகார் முஹம்மத் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் பிரதி அதிதியாகவும் பேருவளை பிரதேச செயலாளர் சிறப்பு அதிதியாகவும் கலந்துகொண்டனர். பேருவலை பிரதேசத்தில் உள்ள மதஸ்தலங்களின் பிரதான மதகுருக்கள், பாடசாலை அதிபர்கள், பொலிஸ் அதிகாரிகள், நகர சபை அதிகாரிகள், வைத்தியசாலை உயர் அதிகாரிகள், சுகாதார சேவை உத்தியோகஸ்தர்கள், கிராம சேவகர்கள், மதங்களுக்கிடையிலான நல்லுறவைக் கட்டியெழுப்புவதற்காக உழைக்கும் நிறுவனங்களின் முக்கியஸ்தர்கள் எனப் பலரும் அழைக்கப்பட்டிருந்தனர்.

ஆரம்ப வைபவத்தைத் தொடர்ந்து, பிரமுகர்கள் ஜாமிஆ நளீமிய்யா கலாபீடத்தின் மஸ்ஜிதில் இடம்பெற்ற திறந்த மஸ்ஜித் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

தொழுகை உட்பட முஸ்லிம்களின் ஏனைய வணக்க வழிபாடுகள் தொடர்பாக அவர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டதுடன் முஸ்லிம் கலாசார அம்சங்கள் பற்றிய சுருக்கமான தெளிவும் வழங்கப்பட்டன. மேலும் கலாபீடத்தின் வளாகத்தைப் பார்வையிடவும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.






எஸ்.ஏ. சுஃப்யான்
(Senior Journalist, Chennai - Tamilnadu, India)

# முடியாத போரின் முடிவு தான் என்ன?

பாலஸ்தீனம் மீதான இஸ்ரேலின் தாக்குதல் தொடர்ந்து நீடித்துவரும் நிலையில், உலக அரங்கில் இஸ்ரேல் மீதான அரசியல் அழுத்தம் வலுக்கத் தொடங்கியிருக்கிறது. ஐ.நா., சர்வதேச நீதிமன்றம், மனித உரிமை அமைப்புகள், உலக நாடுகள் பலவும் இஸ்ரேலுக்கு எதிராகவும், பாலஸ்தீனத்துக்கு ஆதரவாகவும் பல்வேறு வகைகளில் களமிறங்கியிருக்கின்றன.

இந்த நிலையில் இஸ்ரேலிய அரசும் அதன் தலைவர் பெஞ்சமின் நிதான்யாகு வின் கோரத் தாக்குதல் மற்றும் நாட்டில் அவரது அரசுக்கு எதிரான மக்களின் மனநிலை மற்றும் போராட்டங்களை நீர்த்து போக செய்யும் வகையில் தான் அவர் இந்த போரை தொடர்ந்து நடத்தி வருவதாக கூறப்படுகிறது. எத்தனை காலம் தான் அவர் இது போன்ற வங்குரோத்து நடவடிக்கைகளை மேற்கொண்டு ஒரு சமூகத்தை திட்டமிட்டு அழிக்க முடியும் என்பதை அவர் புரிந்து கொள்ள முடிகிறதோ இல்லையோ சர்வதேச பொது சமூகம் முழுமையாக தெரிந்து கொண்டு வருவதை நாம் புரிந்து கொள்ள கூடியதாக உள்ளது.

கடந்த ஆண்டு 2023:அக்டோபர் மாதம் தொடங்கிய இஸ்ரேல் ராணுவத்துக்கும் – பாலஸ்தீன ஹமாஸ் அமைப்புக்கும் இடையேயான போர் 230 நாள்களுக்கும் மேலாக நீடித்துவருகிறது. இந்தப் போரில் தற்போதுவரை சுமார் 39,000 பேர் உயிரிழந்திருக்கின்றனர். குறிப்பாக, பாலஸ்தீன் – காஸாவில் மட்டும் ஹமாஸ் போராளிகள், குழந்தைகள், பெண்கள், பத்திரிகையாளர்கள் என 35,500-க்கும் மேற்பட்டோர் இஸ்ரேல் ராணுவத்தின் கோரத் தாக்குதலில் கொல்லப்பட்டிருக்கின்றனர் இந்த தாக்குதலை காணும் போது நாம் உண்மையில் நாகரீகமான சமூகத்தில் தான் வாழ்ந்து வருகிறோமா என்கிற சந்தேகம் இயல்பாகவே நம் அனைவருக்கும் ஏற்படுவதை தடுக்க இயலாது என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை.

குறிப்பாக, ஹமாஸ் அமைப்பு முழுவதுமாக அழித்தொழிக்கப்படும் என சூளுரைத்துக்கொண்டு தீவிரத் தாக்குதலை மேற்கொண்டுவரும் இஸ்ரேல் ராணுவம் காஸா மண்ணில் பல்வேறு மனித உரிமை மீறல்களை செய்துவருகிறது. பாலஸ்தீனப் பெண்கள் மீதான பாலியல் வன்முறைகளில் ஈடுபடுவது, பள்ளிக்கூடங்கள், மருத்துவமனைகள், நூலகங்களை குறிவைத்து தாக்குவது, உயிரிழந்த மக்களின் உடல் உறுப்புகளைத் திருடுவது, ஐ.நா மற்றும் உலக நாடுகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக அனுப்பி வைக்கப்படும் உணவுப் பொருட்கள், மருத்துவப் பொருட்களை என்கிற சந்தேகம் இடை மறிப்பது என சர்வ சாதாரணமாகப் போர்க்குற்றங்களை நடத்திவருகிறது என குற்றச்சாட்டுகள் வரிசை கட்டுகின்றன.

அதாவது உலகிலேயே மிகப் பெரிய அளவில் ஆன இன சுத்திகரிப்பு நடவடிக்கை இது தான் என்றால் மிகையாகாது என்கிற அடிப்படையில் இந்த தாக்குதலை இஸ்ரேலிய நாட்டின் அரச படைகள் பாலஸ்தீன மக்களை மலை போல் கொன்று குவித்து வருவதை நாம் காண கூடியதாக இருக்கிறது

கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் தொடங்கிய இஸ்ரேல் ராணுவத்துக்கும் – பாலஸ்தீன ஹமாஸ் அமைப்புக்கும் இடையேயான போர் 230 நாள்களுக்கும் மேலாக நீடித்துவருகிறது. இந்தப் போரில் தற்போதுவரை சுமார் 37,000 பேர் உயிரிழந்திருக்கின்றனர். குறிப்பாக, பாலஸ்தீன் – காஸாவில் மட்டும் ஹமாஸ் போராளிகள், குழந்தைகள், பெண்கள், பத்திரிகையாளர்கள் என 35,500-க்கும் மேற்பட்டோர் இஸ்ரேல் ராணுவத்தின் கோரத் தாக்குதலில் கொல்லப்பட்டிருக்கின்றனர். இது தேசங்களுக்கு இடையான மரபு அடிப்படையில் ஆன போர் எனறு என்று எம்மால் அடையாளம் காண முடியாத அளவுக்கு ஒரு சமூகத்தின் வாழ்க்கை முழுவதையும் இஸ்ரேலிய ராணுவம் அழித்து ஒழித்து இருக்கும் நிலையில் சர்வதேச நாடுகள் அனைத்தும் போலியான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதைக் காண முடிகிறது.

குறிப்பாக, ஹமாஸ் அமைப்பு முழுவதுமாக அழித்தொழிக்கப்படும் என ஊழபெசயவரடயவழைளெ தீவிரத் தாக்குதலை மேற்கொண்டுவரும் இஸ்ரேல் ராணுவம் காஸா மண்ணில் பல்வேறு மனித உரிமை மீறல்களை செய்துவருகிறது. பாலஸ்தீனப் பெண்கள் மீதான பாலியல் வன்முறைகளில் ஈடுபடுவது, பள்ளிக்கூடங்கள், மருத்துவமனைகள், நூலகங்களை குறிவைத்து தாக்குவது, உயிரிழந்த மக்களின் உடல் உறுப்புகளைத் திருடுவது, ஐ.நா மற்றும் உலக நாடுகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக அனுப்பி வைக்கப்படும் உணவுப் பொருட்கள், மருத்துவப் பொருட்களை இடைமறிப்பது என சர்வசாதாரணமாகப் போர்க்குற்றங்களை நடத்திவருகிறது என குற்றச்சாட்டுகள் வரிசை கட்டுகின்றன.

தொடக்கத்தில் பாலஸ்தீனம்(காஸா பகுதி) மீதான தாக்குதலை வேடிக்கைப் பார்த்து வந்த உலக நாடுகள், எட்டு மாதங்களுக்குப் பிறகு இப்போது திடீரென விழித்துக்கொண்டிருக்கின்றன.

போர் நிறுத்தம் கோரி இஸ்ரேலுக்கு அழுத்தம் கொடுத்துவருகின்றன. இருப்பினும் இதையெல்லாம் கண்டுகொள்ளாமல் இஸ்ரேல் தனது தாக்குதலை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இந்த நிலையில், உலக நாடுகள் பலவும் பாலஸ்தீனத்தை தனிநாடாக அங்கீகரிக்க முடிவெடுத்திருப்பது திடீர் திருப்பத்தை ஏற்படுத்தியிருக்கிறது. குறிப்பாக, கடந்த மே 10-ம் தேதி ஐக்கிய நாடுகள் சபையில் பாலஸ்தீனத்தை நிரந்தர உறுப்பு நாடாக சேர்க்க வேண்டும் என அரபு நாடுகள் கூட்டமைப்பு தீர்மானம் ஒன்றை கொண்டு வந்தன.இந்த தீர்மானத்தின் அடிப்படையில் கூட்டப்பட்ட அவசரக்கூட்டத்தில் ஐநாவில் உறுப்பு நாடுகளாக இருக்கும் 193 நாடுகளிடம் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இந்த வாக்கெடுப்பில் 143 நாடுகள் பாலஸ்தீனத்திற்கு ஆதரவாக வாக்களித்தன. அதேசமயம், அமெரிக்கா, இஸ்ரேல், அர்ஜென்டினா உள்ளிட்ட 9 நாடுகள் எதிராக வாக்களித்தன. மேலும், 25 நாடுகள் தீர்மானத்தை புறக்கணித்தன. இறுதியில், தீர்மானத்துக்கு அதிக பெரும்பான்மை கிடைத்ததால், ஐ.நா.வில் பாலஸ்தீனத்தை நிரந்தர உறுப்பு நாடாக்கும் வரைவு தீர்மானம் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டது. இதனால் ஆத்திரமடைந்த இஸ்ரேல் பிரதிநிதிகள் தீர்மானத்தின் நகலை அவையிலேயே கிழித்தெறிந்து தங்களின் எதிர்ப்பை வெளிக்காட்டினர்.

ஸ்வீடன், நார்வே, பின்லாந்து, ஐரோப்பா

அதேபோல, ஸ்பெயின் பிரதமர் பெட்ரோ சான்செஸ், ஹஹஸ்பெயின் மக்களின் பெரும்பான்மை உணர்வை எதிரொலிக்கும் வகையில் பாலஸ்தீனத்தின் அரசு அங்கீகரிக்கப்படும். இந்த முயற்சி நீதி, சமாதானம், ஒத்திசைவு போன்ற வார்த்தைகளில் இருந்து செயலுக்கு நகர்ந்திருக்கிறது!” எனத் தெரிவித்திருக்கிறார்.

அதனைத் தொடர்ந்து அயர்லாந்து பிரதமர் சைமன் ஹாரிஸ், ஹஹஇரு நாடுகளின் தீர்வு இஸ்ரேலுக்கும், பாலஸ்தீனத்திற்கும் மற்றும் அவர்களின் மக்களுக்கும் அமைதி மற்றும் பாதுகாப்பிற்கான ஒரே நம்பகமான பாதை! இன்று அயர்லாந்து பாலஸ்தீன அரசை அங்கீகரிக்கிறது. மத்திய கிழக்கில் அமைதி மற்றும் நல்லிணக்கத்திற்கு இந்த அங்கீகாரம் பங்களிக்கும் என்று நாங்கள் நம்புகிறோம் எனத் தெரித்திருக்கிறார். இது போன்ற தேசம் தாண்டிய நிலையில் மனித நேயம் சார்ந்த விடயங்களில் சர்வதேச நாடுகள் பாலஸ்தீன மக்களின் உரிமைகளை நீர்த்து போக முடியாத அளவுக்கு ஆதரவு கரம் நீட்டியது ஓரளவு ஆறுதல் அளிக்கும் வகையில் இருப்பதாக நம்பப்படுகிறது.

இந்த மூன்று நாடுகளும் வரும் மே 28-ம் தேதி அதிகாரப்பூர்வமாக பாலஸ்தீனத்தை தனி நாடாக அங்கீகரிக்க இருக்கின்றன. இந்த நாடுகளைப் போலவே ஸ்லோவேனியா. மால்டா என அடுத்தடுத்த ஐரோப்பிய நாடுகளும் பாலஸ்தீனத்தை அங்கீகரிக்க முன்வந்திருக்கின்றன. இதற்கிடையில் கொலம்பியா நாடு இஸ்ரேல் உடனான உறவை முறித்துக்கொள்வதாக அறிவித்திருக்கிறது.

எல்லா நாடுகளும் அதன் பிரதிநிதிகளும் கொடுத்த மிகவும் கடுமையாக விமர்சனம் மற்றும் அழுத்தம் காரணமாக இஸ்ரேல் கடுமையான ஆத்திரத்தை வெளிப்படுத்தியிருக்கிறது. குறிப்பாக, இஸ்ரேலிய வெளியுறவு அமைச்சர் இஸ்ரேல் காட்ஸ், ஹஹநான் அயர்லாந்து, நார்வே நாடுகளுக்கு ஒரு தெளிவான செய்தியை அனுப்புகிறேன். இஸ்ரேலின் இறையாண்மையை குறைத்து மதிப்பிடுபவர்களுக்கும், அதன் பாதுகாப்பிற்கு ஆபத்தை விளைவிப்பவர்களுக்கும் முன்பாக அமைதியாக இருக்காது.

அயர்லாந்து – நார்வேயின் முட்டாள்தனம் ஒருபோதும் எங்களைத் தடுக்காது எங்கள் இலக்குகளை அடைவதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம்.எங்கள் குடிமக்களுக்கு பாதுகாப்பை மீட்டெடுப்பது, ஹமாஸை அழித்தொழிப்பது, பணயக்கைதிகளை மீட்டெடுப்பது எங்களின் நியாயமான இலக்குகள். எங்களுக்கு எதிராக பாலஸ்தீனத்தை தனிநாடாக ஆதரிக்கும் இந்த நாடுகள் பயங்கரவாதத்துக்கு பலன் இருக்கிறது என்பதை உலகுக்கு சொல்ல வருகின்றன! எனவே நார்வே, அயர்லாந்து நாடுகளுக்கான எங்கள் தூதர்களை திரும்பப் பெறுகிறோம். ஸ்பெயின் அரசும் இதே முடிவை எடுக்குமானால், ஸ்பெயினுக்கான இஸ்ரேல் தூ தரையும் நாங்கள் திரும்பப் பெறுவோம்!” என ஆவேசமாகப் பதிலளித்திருக்கிறார்.இஸ்ரேலுக்கு எதிராக உலகநாடுகள் பலவகையில் செக் வைத்திருப்பதால், வேறு வழியின்றி இஸ்ரேல் போர் நிறுத்த முடிவுக்கு வரும் என உலக நாடுகள் எதிர்பார்க்கப்படுகிறது.

சர்வதேச நாடுகள் மற்றும் மனித நேயம் சார்ந்த விடயங்களில் அக்கறை கொண்ட பல்வேறு அமைப்புகள் எவ்வளவு அதிகமாக அழுத்தம் தந்த நிலையிலும் கூட இஸ்ரேலிய ராணுவம் மற்றும் அதன் அரச தலைமை எந்த விதத்திலும் விட்டு கொடுக்க தயாராக இல்லை என்பதை தான் அவர்களின் நடவடிக்கைகள் மூலம் நாம் அறிந்து கொள்ள கூடியதாக இருக்கிறது.

அதே சமயம் போர் நிறுத்த முயற்சிகளை முற்றிலும் சீர்குலைவு செய்யும் வகையில்,

கான் யூனிஸ் நகரில் இஸ்ரேலிய வான்வழித் தாக்குதலில் இருந்து உயிர் தப்ப ஓடும் மக்கள் காஸா போர் நிறுத்த முயற்சிகளை “கொடூரமான படுகொலைகள்“ மூலம் நெதன்யாகு சீர்குலைக்க முயல்வதாக ஹமாஸ் தலைவர் இஸ்மாயில் ஹனியே குற்றம் சாட்டியதாக ஏ.எஃப்.பி செய்தி முகமை தெரிவிக்கிறது. இஸ்ரேலிய அதிபர் பெஞ்சமின் நிதான்யாகு ஒரு இரத்த வெறி பிடித்த மனிதர் என்பதை தான் காஸா வின் மக்களின் துயரங்கள் மத்தியில் நாம் புரிந்து கொள்ள கூடியதாக இருக்கிறது.

”பாலத்தீன தலைவர்களை குறிவைப்பதாக இஸ்ரேல் கூறுவது இது முதல் முறையல்ல. அது பொய் என்று பின்னர் நிரூபிக்கப்பட்டுள்ளது” என்று ஹமாஸ் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

”பொதுமக்கள் யாரும் இல்லாத திறந்த வெளியில் இந்த தாக்குதல் நடந்தது”, என இஸ்ரேலிய ராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார். அதாவது இஸ்ரேலிய ராணுவம் மற்றும் அரசின் நடவடிக்கைகள் பொய்யான தகவல்களை தான் இது வரை பகிர்ந்து கொள்ளும் வகையில் இருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன. ஏனெனில் அகதிகள் முகாமில் தாக்குதலை துரிதப்படுத்தும் விதமாக நடவடிக்கைகள் மேற்கொண்ட இஸ்ரேலிய ராணுவம் அப்பாவி பொதுமக்கள் குழந்தைகளை கொலை செய்த பிறகு ஹமாஸ் இயக்கத்தின் தலைவர்களை கொலை செய்து விட்டதாக ஜம்பம் அடிப்பதை நான் புரிந்து கொள்ள கூடியதாக உள்ளது.

ஏமன் நாட்டில் மிகப் பெரிய அளவில் ராணுவம் சார்ந்த செயல்பாடுகளை நடத்தி வரும் ஹொதிகள் இஸ்ரேலிய நாட்டின் மீது மிகப்பெரிய அளவில் ஆன தாக்குதலை நடத்தி முடிக்க திட்டமிட்டு வருவதாக லெபனான் சார்பு நிலை பத்ரிகையான அல் அக்பர் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

ஹொதிகள் பாலஸ்டிக் ஏவுகணை மூலம் மிகப்பெரிய அளவில் தாக்குதலை வெவ்வேறு வழித் தடங்களில் இருந்து டெல் அவிவ் நோக்கி தாக்குதல் நடத்தி வந்த நிலையில் அதற்கு பழி வாங்கும் நடவடிக்கையாக ஏமனில் உள்ள ஹொரைரா துறைமுகத்தின் மீது நடத்திய தாக்குதலை அடுத்து 1,50 டன் அளவுக்கு அதிகமான எண்ணெய் சேமிப்பு கிடங்கில் இருந்த எண்ணெய் முழுமையாக இஸ்ரேலிய தாக்குதல் மூலம் பற்றி எரிகிறது . மேலும் இந்த துறைமுகத்தின் மீது நடத்தப்பட்ட பல்வேறு தாக்குதலை அடுத்து பல்வேறு இலக்குகள் முழுமையாக அழிந்து போனதாக தெரியவருகிறது . இதனை தொடர்ந்து

இஸ்ரேலிய ராணுவம் வீசிய ஏவுகணைகள் மிகப்பெரிய அளவில் ஆன சேதத்தை ஏற்படுத்தியது என்று நம்பக்கூடிய வகையில் செய்திகள் வெளியாகியுள்ளன.

இது போன்ற மிகவும் கடுமையான தாக்குதலுக்கு பழி வாங்கும் நடவடிக்கையாக இஸ்ரேலிய நாட்டின் பல்வேறு நிலைகள் மற்றும் துறை முகங்கள் சார்ந்த பகுதிகளில் உக்கிரமான தாக்குதலை நடத்தியே ஆக வேண்டும் என்கிற நெருக்கடியான நிலைக்கு ஹொதிகள் தள்ளப்பட்டுள்தாக தெரிய வந்துள்ளது.இதோடு இஸ்ரேலிய எண்ணெய் வயல்களை குறி வைத்து மிகப்பெரிய அளவில் தாக்குதலை ஹொதிகள் தொடுக்கலாம் என்று நம்பப்படுகிறது. இதேபோல் இஸ்ரேலிய நாட்டிற்கு எண்ணெய் சப்ளை செய்யும் அஜர்பைஜான் மற்றும் கஜகஸ்தான் நாட்டின் கப்பல்களை குறி வைத்து முழுமையாக அழிக்க ஹொதிகள் திட்டமிட்டு செயல்பட்டு வருவதாகவும் பத்திரிகை செய்திகள் வெளியாகியுள்ளன.இந்த நடவடிக்கைகள் மூலம் மத்திய தரைக்கடல் பகுதியில் மிகவும் பரபரப்பான சூழ்நிலை காணப்படுகிறது.

இதற்கிடையில் செங்கடல் பகுதியில் பல்வேறு கப்பல்கள் மீது மிகுந்த தாக்குதலை நடத்தி வந்த அனுபவம் உள்ள ஹொதிக்கள் இஸ்ரேலிய நாட்டிற்கு வரும் பல்வேறு கப்பல்களை தாக்குதல் நடத்தி சேதாரத்தை விளைவிக்க முயலலாம். இந்த முயற்சியில் மிகப்பெரிய அளவில் ஆன கடற்பகுதியை கொண்ட இந்திய பெருங்கடல் பகுதிகளில் தாக்குதலை நடத்தினால் அது சர்வதேச நாடுகள் மத்தியில் மிகப் பெரிய அளவிலான அதிர்வலைகளை ஏற்படுத்தலாம் என்று எதிர்பார்ப்பு நிலவுகிறது.

இஸ்ரேலிய ராணுவம் ஹொரைரா துறைமுகத்தின் மீது நடத்திய தாக்குதலுக்கு கண்டிப்பாக பதில் தாக்கும் நடத்திய தீருவோம் என்று ஹொதிகள் தெரிவித்துள்ளார்கள் இந்த வான்வழி தாக்குதல்களுக்கு “திறம்பட பதிலடி கொடுக்கப்படும்” என்று ஹூத்தியின் உயர்மட்ட அரசியல் குழுவை (Supreme Political Council) மேற்கோளிட்டு, சனிக்கிழமை மாலை அதன் ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

ஏமனில் முன்பு ஹூத்தி குழுவினர் மீது இஸ்ரேல் தாக்குதல் நிகழ்த்தியதில்லை. ஏடன் வளைகுடா மற்றும் செங்கடலில் வணிக கப்பல்கள் மீது ஹொத்திகள் தாக்குதல் நிகழ்த்துவதை தடுத்து நிறுத்தும் வகையில், அக்குழு மீது பல மாதங்களாக அமெரிக்கா மற்றும் பிரிட்டன் ஆகிய நாடுகள் வான்வழி தாக்குதல்களை நடத்தின.

இஸ்ரேலுக்கு செல்லும் அல்லது அங்கிருந்து வரும் கப்பல்கள் மீது தாங்கள் தாக்குதல் நடத்துவதாக ஹொத்தி குழு ஆரம்பத்தில் தெரிவித்தது. ஆனால், தாக்குதல் நடத்தப்பட்ட பல கப்பல்களுக்கு இஸ்ரேலுடன் எவ்வித தொடர்பும் இல்லை. வான்வழி தாக்குதல்கள் தொடங்கியதிலிருந்து அமெரிக்கா மற்றும் பிரிட்டன் நாடுகளுடன் தொடர்புடைய கப்பல்களையும் ஹொதி குழுக்கள் குழு இலக்கு வைத்து தாக்குதலை மேற்கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஹொதி படைகள், லெபனான் நாட்டில் இருந்து செயல்படும் ஹிஸ்புல்லாஹ் என்று இஸ்ரேலிய நாட்டை சுற்றி மிகப்பெரிய அபாயத்தை அந்த நாடு சந்தித்து வருகிறது. இஸ்ரேலிய ராணுவம் மிகுந்த அளவில் ராணுவம் சார்ந்த பலத்தை பெற்று இருந்த போதிலும் தற்போதைய ஓயாதா போரில் பலம் இழந்து சோர்வு அடைந்த நிலையில் ராணுவம் உள்ள நிலையில் இனியும் எத்தனை காலம் இந்த போரை அவர்களால் தொடர்ந்து நடத்த முடியும் என்பது தெரியவில்லை.

ஹொதிகள் மிகவும் தொலைவில் சென்று தாக்குதலை நடத்த கூடிய அளவில் வல்லமை கொண்ட பாலிஸ்டிக் ஏவுகணை களை கொண்டு தாக்குதலை நடத்த திட்டம் தீட்டி வருவதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன. அதேநேரத்தில் ஈரான் நாட்டின் நேரடி கண் அசைவில் இயங்கும் இவர்களிடம் ஏராளமான ட்ரான்கள் உள்ளது என்பதையும் நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். ஆளில்லா ட்ரோன் தாக்குதல்கள் ஆட்களால் நடத்தப்படும் தாக்குதலை விட வலிமையானது அல்ல என்று இருந்த போதிலும் இலக்குகளை துல்லியமான முறையில் தாக்கும் திறனை பெற்றுள்ள ஹொதிகள் அத்தனை எளிமையான முறையில் சமாதானமாக வாய்ப்பே இல்லை என்பது தான் உண்மை. ஏனெனில் ஏமன் நாட்டில் உள்ள ஹொரைரா துறைமுகத்தின் மேல் தாக்கிய வேதனை மட்டும் வடுக்கள் ஒருபக்கம் அவர்களை பலி வாங்க துடிக்கிறது. அதேநேரத்தில் இஸ்ரேலிய ராணுவம் மற்றும் அதன் ராணுவம் ஏமன் தாக்குதல் ஊடாக ஒரு செய்தியை அந்த பிராந்தியத்தில் வாழும் ஏனைய அரசுகளுக்கு சொல்லியுள்ளார்கள். ஆம் எங்கள் மீது தாக்குதலை தொடர்ந்தால் நீங்களும் இது போன்ற தொடர் தாக்குதலுக்கு உள்ளாக வேண்டிய நிலை ஏற்படும் என்பது தான் அதுவாகும்.

ஒயாத மரண ஓலம்.... இலக்கு இல்லாத போர்... இதன் முடிவு தான் என்ன ? எல்லாவற்றிற்கும் ஒரு முடிவு உண்டு என்பதே இதன் முடிவாக இருக்கிறது என்பதே உண்மையாகும்!

# தகனமா அடக்கமா என்ற விவகாரத்தில் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு இழப்பீட்டை வழங்குவேன்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச

கடந்த காலங்களில், தகனமா அடக்கமா என்ற விவகாரத்தில் விஞ்ஞானபூர்வ அடிப்படையில் அல்லாது, இனவாதம், மதவாதம் ஆகியவற்றின் அடிப்படையில், ஒரு இனத்தை ஓரங்கட்டுவதும், ஒரு மதத்தை நசுக்குவதும்தான் அரசின் கொள்கையாக அமைந்து காணப்பட்டது.

இன்று அதற்காக அவர்கள் மன்னிப்பு கேட்கின்றனர், மன்னிப்பு கேட்பது நல்ல விடயம் தான். என்றாலும், வலுக்கட்டாயமாக தகனம் செய்யப்பட்ட குடும்பங்களுக்கு, அதனால் சிரமத்திற்கு உள்ளான குடும்பங்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டும். ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில் இந்த இழப்பீட்டைப் பெற்றுத் தருவேன் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

பிரபஞ்சம் தகவல் தொழிநுட்ப வேலைத்திட்டத்தின் கீழ், 376 ஆவது கட்டமாக ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள் மற்றும் அகராதிகள் என்பவற்றை கொழும்பு அரபாத் முஸ்லிம் வித்தியாலயத்திற்கு அண்மையில் (24) வழங்கி வைக்கும் நிகழ்விலேயே இதனை தெரிவித்தார்.

மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில்

இன்று, பாலஸ்தீன மக்கள் மிகவும் ஆபத்தான நிலையை சந்தித்துள்ளனர். குறிப்பாக சர்வதேச வரலாற்றில் இடம்பெற்ற விடயங்களை சிறுவர்கள் அறிந்து கொள்ள வேண்டும். இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர்,





அரபு நாடுகளுக்கும் இஸ்ரேலுக்கும் இடையே பல யுத்தங்கள். 1948, 1956 சுவாஸ் கால்வாய் காரணமாக ஏற்பட்ட யுத்தம் என பல யுத்தங்கள் நடந்தன, நடந்து கொண்டிருக்கின்றன. இரு நாடுகளும் இணக்கப்பாட்டோடு இணைந்து செயல்படுவதே உலகின் பெரும்பான்மையான நாடுகள் ஏற்றுக்கொள்ளும் தீர்வாகும்.

சகல சந்தர்ப்பங்களிலும் சமாதானத்துக்காக பாடுபட்ட தலைவர்கள் பயங்கரவாதிகளால் கொல்லப்பட்டனர். அன்வர் சதாத், இஸ்ரேலின் பிரதமராக இருந்த ஒருவர் கூட அமைதிக்கு உடன்பட்டதற்காக கொல்லப்பட்டார். எனவே, பிள்ளைகளும் மாணவர்களும் இந்த வரலாற்றை தெரிந்து வைத்துக் கொள்ள வேண்டும். வரலாற்றில் இருந்து பாடம் கற்றுக் கொள்ள வேண்டும் என எதிர்க் கட்சித் தலைவர் தெரிவித்தார்.




# ஒழுக்க விழுமியங்களும் கல்வி மேம்பாடும்...

இன, மத பாகுபாடுகள் அனைத்தையும் கடந்து பேசப்படுகின்ற சூடான பேசு பொருளாக பண்பாட்டு வீழ்ச்சி ஒழுக்க வீழ்ச்சி இன்று பரவலாக காணப்படுகின்றது.

கடந்த தலைமுறை எத்தகைய பக்குவத்தையும் பண்பாட்டையும் பணிவையும் பேணிப் பாதுகாத்து வந்ததோ அவை எதுவும் இன்றைய இளம் தலைமுறை யிடம் காணக் கிடைக்காத ஒன்றாக உள்ளது.

முன்பெல்லாம் மாணவர்கள் தத்தமது ஆசிரியர்களை கண்ணியமா கௌரவமாக மரியாதையாக மதிப்பச்சத்தோடு பார்த்து வந்தனர் நடந்து கொண்டனர் மரியாதை செலுத்தினர்.

ஆனால், இன்று இத்தகைய மதிப்பும் மரியாதையே வழங்கப்படுவதில்லை ஏன் அவ்வளவு ஆசிரியர்கள் குறித்தோ அதிபருக்கு குறித்தோ கல்வி சமூகம் குறித்தோ எந்தவிதமான பொறுப்புமின்றி மரியாதையும் இன்றி தான் தோன்றித்தனமாக நடக்கக்கூடிய வெறித்தனமான ஒரு தலைமுறை தோன்றி இருக்கின்றது.

தேசிய பொதுப்பணிகள் முடிந்து வெளியேறுகின்ற பொழுது பாடசாலை சொத்துகளுக்கு சேதம் விளைவிக்கின்ற ஆசிரியர்களை மட்ட ரகமாக இம்சைக் குற்படுத்துகின்ற பண்பாடிலிருந்து ஒரு தலைமுறை வேகமாக தோற்றும் எடுத்து வருவதை சமகால நிகழ்வுகள் எனக்கு சுட்டிக்காட்டுகின்றன.

பல பொழுது இவை நாம் வாழும் பகுதிகளில் அல்லது எமது பாடசாலைகளில் அல்லது நாம் பணியாற்றுகின்ற இடங்களில் அல்லது எமது பிள்ளைகளது பாடசாலைகளில் சர்வ சாதாரணமாக இடம்பெறுவதை கண்டிருக்கலாம்.

"ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம் உயிரிலும் ஓம்பப்படும்" என்பது வள்ளுவப் பெருந்தகையின் வாக்கு இந்த வாக்கின் செறிவு வற்றாத ஊற்றாக இன்னும் பெருக்கெடுத்துக் கொண்டிருக்கின்றது.

இன்றைய 21 ஆம் நூற்றாண்டு உலகம் எதிர்கொள்கின்ற பண்பாட்டு நெருக்கடி ஒழுக்க வீழ்ச்சி சமய சன்மார்க்க போதனைகளில் இருந்து தூர விலகி வாழ்தல் போன்றவை மக்களால் நெருக்கடிகளை தோற்றுவித்துள்ளது. பாடசாலை சமூகத்தாலோ பெற்றோராலோ கையாள முடியாத அளவுக்கு கட்டிளமைப் பருவத்தினர் வித்தியாசமான ஒரு போக்கை பெற்றிருக்கின்றன ர்.

கட்டிளமைப் பருவத்தினர் தமது வாழ்வில் அநேகமான காலத்தை பாடசாலையில் கழிப்பதால் இத்தகைய பிரச்சினைகளை பாடசாலைக் கல்விச் செயற்பாடுகள் மூலமே தீர்க்கப்பட வேண்டும். அதற்கு பாடசாலை நிர்வாக ஆசிரியர்கள் கற்ற பெற்றோர் கல்விக்கு குரல் கொடுப்போர் இணைந்து செயற்படுத்த வேண்டும்.

கல்விக் கூடாக ஒழுக்க விழுமியங்கள் பண்பாடுகள் நடத்தை மாற்றங்கள் மனப்பாங்குகள் போன்றவை குறித்த தெளிவும் விளக்கமும் மாணவப் பருவம் முதல் ஊட்டி வளர்க்கப்பட வேண்டும். ஒவ்வொரு கற்றல் செயற்பாடுகளும் அதனடியாக வருகின்ற தேர்ச்சிகள் தேர்ச்சி மட்டங்கள் அடைவுகள் போன்றன ஒழுக்கத்தை அடிப்படையாகக் கொண்டு நடைமுறை வாழ்வோடு தொடர்பான வகையில் அமையும் பட்சத்தில் மாத்திரமே சமூகத்தில் ஒழுக்கம் சார்ந்த மேம்பாட்டைக் காணலாம்.

அன்றாட மனித வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்தாத கல்வியால் எந்தப் பயனும் இருக்காது. இன்று காகித தகைமைகளைியிநச ஙரயடகைஉயவழைளெ சுமந்து கொண்டு மேல்மட்டம் வரை உச்சம் தொட்டிருப்பவர்களிடம் கூட இங்கிதம் பண்பாடு விழுமியங்கள் மானுட நாகரீகம் போன்ற எதனையும் கண்டுகொள்ள முடியாது. மனிதன் எல்லா விடயத்திலும் சுயநலமியாக மாறிவிட்டுள்ளான். பிறரது உரிமைகளை உணர்வுகளை கண்டு கொள்வதுமில்லை. கணக்கெடுப்பதும் இல்லை. அவற்றுக்குரிய மதிப்பு மரியாதை கொடுப்பதும் இல்லை.

ஆசிரியர் மாணவர் உறவுகளில் மிகப் பெரிய விரிசல் கணவன் மனைவி உறவில் பாரிய விரிசல் பெற்றோர் பிள்ளை உறவில் பாரிய விரிசல் தலைமுறை இடைவெளி இவை எல்லாவற்றுக்கும் ஒழுக்கம் சார்ந்து ஒரு தீர்வை கல்விக் கூடாக வழங்க முடியுமாக இருந்தால் இத்தகைய பண்பாட்டுச் சிக்கல்களை அதனது முடிச்சுகளை இலகுவாக அவிழ்த்து விடலாம்.

இன்று மூத்தவர்களுக்கு மரியாதை செய்யாத பண்பு, சிறியவர்களுக்கு அன்பு காட்டாத பண்பு, வலது குறைந்தோராகட்டும் நோயாளிகளாகட்டும் ஏழை எளியவர்களாகட்டும் வறுமை கோட்டின் கீழ் வாழக்கூடியவர்களாகட்டும் கஷ்டப்படக் கூடியவர்களாகட்டும் எவரையும் கண்டு கொள்ளாமல் தன் நலம் மாத்திரமே முன்னுரிமை படுத்தப்பட்டு தன்னுடைய தேவைப்பாடுகள் மாத்திரம் நிறைவேற்றப்பட்டால் திருப்தி அடைகின்ற ஒரு விதமான குரோத கொடிய மனோ நிலையில் தான் சமகால மனிதனின் சிந்தனைகள் கட்டமைக்கப்பட்டிருக்கின்றன. பிறருக்கு உதவி ஒத்தாசை புரிய வேண்டும் பிறரது தேவைகளை கருத்தில் கொள்ள வேண்டும் பிறரை முற்படுத்த வேண்டும் தன்னால் முடியுமான உதவிகளை பிறருக்கு அடுத்தவர்களுக்கு உறவுகளுக்கு செய்ய வேண்டும் என்ற குறைந்தபட்ச எண்ணமோ ஆசையோ தயார் நிலையோ அறவே அற்ற ஒரு இறுகிய குறுகிய மனப்பாங்குடன் தான் மக்கள் வாழப் பழகி உள்ளனர்.

பாடசாலைகளும் வகுப்பறைகளும் ஆசிரியர்களும் தான் தத்தமது கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் வழியாக பாடசாலையில் மேற்கொள்ளப்படுகின்ற மறைக்கலைத் திட்டம் வழியாக இணைப்பாடவிதான செயற்பாடுகள் வழியாக களச்செயற்பாடுகள் வழியாக கலை கலாசார செயற்பாடுகள் வழியாக இத்தகைய சமூக விவகாரங்கள் குறித்து கவனயீர்ப்பு செய்ய வேண்டும் சமூகத்தில் நிலவுகின்ற இத்தகைய கோளாறுகளை குளறுபடிகளை அடையாளம் காட்டக் கூடிய வகையில் மேற்படி விவகாரங்கள் பேசுபொருளாக்கப்பட வேண்டும். பாடசாலை வழியாக இவை குறித்த தெளிவு கிடைக்கின்ற பொழுது, அதே மாணவர்கள் சமூகத்திற்கு வருகின்ற பொழுது இத்தகைய பிரச்சினைகள் பற்றிய தெளிவோடு தான் சமூக களத்திலே ஒன்றரக் கலந்து விடுவார்கள். இது கால வரை பாடசாலை வாழ்க்கையில் கலைத்திட்டம் வழியாக கற்றுக் கொண்ட விடயங்களை சமூக வாழ்க்கையில் அமுல்படுத்த வேண்டும் என்று உள்ளுணர்வு அவர்களுக்கு இருக்கும்.

இந்தப் பின்புலத்தில் சமூக வாழ்வில் ஈடுபடுகின்ற பொழுது ஒழுக்கம் சார்ந்து சிக்கல்களை கனிசமான அளவு தணிக்க குறைக்க மட்டுப்படுத்த முடியும்

எனவே ஒழுக்க விழுமியம் என்பது, ஒழுக்கம் சார்ந்த மாற்றம் என்பது போதனை சார்ந்த விடயம் அல்ல. அது வாழ்வியல் சார்ந்த நடத்தை, சார்ந்த வாஸ்தவம் சார்ந்த ஒரு விடயம். அமுல்படுத்தி அனுசரித்து போகும் பொழுது மட்டும் தான் அதனுடைய உண்மையான தன்மை வெளிப்படும்.

உதாரணமாக சிக்கல்கள் நெருக்கடிகள் அசௌகரியங்கள் அசம்பாவிதங்கள் ஏற்படுகின்ற பொழுது பொறுமையைக் கையாள வேண்டும், கோபத்தை தணிக்க வேண்டும், நிதானமாக நடந்து கொள்ள வேண்டும். விட்டுக் கொடுக்க வேண்டும். மன்னிக்க வேண்டும். என்றெல்லாம் பாடம் எடுக்க முடியும் ஆனால் மேற்படி ஒவ்வொன்றும் தனக்கான சுய அனுபவமாக மாறுகின்ற பொழுது அந்த இடத்தில் நாம் நடந்து கொள்வதற்குரிய வாய்ப்பும் அவகாசமும் கிடைக்கின்ற பொழுது தான் அத்தகைய ஒழுக்கம் சார்ந்து நாகரீகம் சார்ந்த விடயங்களை செயல்படுத்த வாய்ப்பு கிடைக்கும். அப்பொழுதுதான் அத்தகைய பண்பாடுகளை எப்படி வாழ்வியலோடு வாழ்வியல் சார்ந்த நடைமுறை சிக்கல்களோடு பொருத்திப் பார்க்க முடியும். அதுதான் உண்மையான விழுமிய மாற்றமாக பரிணமிக்கும்.






நாச்சியாதீவு பர்வீன்

# நண்பேண்டா!

-நாகூர் ரூமி-

நண்பர் யுகபாரதியிடம் வேண்டுகோளாய் ஒரு வேலை கொடுத்திருந்தேன். ஏற்கனவே நாகூர் ஜஃபருல்லாஹ் நானாவின் “இது கண்களுக்கு அல்ல, மனசுக்கு“ என்ற தலைப்பில் –தலைப்பு நானா கொடுத்தது – கவிதைகளை நான்தான் கொண்டுவந்திருந்தேன். நாகூர் தமிழ்ச்சங்கத்தில் அதை வெளியிட்டோம்.

அப்போதே ஜஃபருல்லாஹ் நானாவுக்கு நினைவு தப்பியிருந்தது. ஒரு குழந்தையாட்டம் ஆகிவிட்டிருந்தார். தன்னுடைய கவிதை நூல் வெளியிடப்படுகிறது என்று அவருக்குத் தெரியவில்லை. ஆனால் என்னை மட்டும் தெரிந்திருந்தது! என் அருகில்தான் அமர்ந்தார். அதுவும் மேடையின் பின்பக்கமாக.

அக்கவிதைகளை அவரிடமிருந்து வாங்கி நான் தொகுத்த கதையை ஒரு காவியமாகவே எழுதிவிடலாம்! அவ்வளவு சிரமப்பட்டேன்! ஒரு சின்ன உதாரணம் சொல்கிறேன்.

ஆம்பூரில் அவர் கவிதைகளை எழுதிவைத்த தாளைப்பார்த்து அவர் சொல்லச்சொல்ல, அல்லது அவர் அருகில் இருக்க நானே, கம்ப்யூட்டரில் உள்ளிட்டுக் கொண்டிருந்தேன். திடீரென்று எழுந்து டிவி சீரியல் பாக்கச் சென்றார்.

‘நானா, உங்க கவிதையைத்தான் கம்ப்யூட்டரில் அடித்துக் கொண்டிருக்கிறேன். நீங்க பாட்டுக்கு டிவி பாக்கப்போறீங்க?’ என்றேன்.

‘ஓய், கவிதை முக்கியமா சீரியல் முக்கியமா?’ என்று கேட்டுவிட்டு சீரியல் பார்க்கச் சென்றுவிட்டார்! அவர் அப்படித்தான்!

நாகூர் ஹனிஃபா மாமா குரலில் உச்சஸ்தாயியில் பாடுவார் என்று நண்பர் யுகபாரதியிடம் சொன்னேன். அப்போது அவர் தங்கியிருந்த வீட்டுவசதி வாரிய ஃப்ளாட் ஒன்றுக்கு நானும் ஜஃபருல்லா நானாவும் சென்றிருந்தோம். யுகபாரதி நம்பவில்லை.

டெமோ மாதிரி ஏதோ கேட்டார் அல்லது நான் கேட்டுக்கொண்டேன். உடனே ஜஃ பருல்லா நானா உச்சஸ்தாயியில் பாட ஆரம்பித்தார்! இரவு 12 மணிக்கு மேல்!

அய்யய்யோ, இருக்குமிடத்துக்கு இவர் உலைவைத்துவிடுவார் போலுள்ளதே என்று பயந்த யுகபாரதியும் நானும் அவரை ‘ஆஃப்’ செய்தோம்!

நானா இப்போது உயிரோடு இல்லை. ’அண்ணல் பெருமான் என் இல்லம் வந்தால் அவர்களை எப்படி வரவேற்பேன்’ என்ற அவர் எழுதிய பாடலுக்காக நிச்சயம் பெருமானாரோடு அவர் சுவனத்தில் இருப்பார் என்று நம்புகிறேன்.

அவர் ’போன’பிறகு அவருடைய எல்லாக் கவிதைகளையும் நான் எடுத்து வந்தேன். அவை பெரும்பாலும் திருமண அழைப்பிதழ்களின் பின்பக்கத்தில் முத்து முத்தான எழுத்துக்களில் எழுதப்பட்டிருந்தன!

அவை எல்லாவற்றையும் நான் கம்ப்யூட்டரில் உள்ளிட்டேன். அதையெல்லாம் யுகபாரதியிடம் கொடுத்து ஒரு முழு கவிதை நூலாகக் கொண்டுவரவேண்டும் என்ற என் ஆசையைச் சொல்லியிருந்தேன்.




இவ்வுலகில் எனக்குக் கிடைத்த அற்புதமான ஒரு சில நண்பர்களில் யுகபாரதியும் ஒருவர். அவர் எவ்வளவு பிசியாக இருக்கிறார் என்பது உங்களுக்குத் தெரியும். அனேகமாக தமிழ்த்திரையுலகுக்கு இப்போது இருக்கின்ற ஒரே பாடலாசிரியர் அவர்தான் என்றால் அது மிகையாகாது.

எந்தக் கெட்டப்பழக்கமும் இல்லாத, விமர்சனங்களை மனதில் போட்டுக்கொள்ளாத அற்புதமான மனிதர் அவர். நட்பை மதிப்பவர். (நானும் அப்படியே)!

ஜஃபருல்லா நானாவின் ஒட்டுமொத்தக் கவிதைகளையும் அவரிடம் கொடுத்து ஒரு நூலாகக் கொண்டுவந்துவிட வேண்டும் என்ற என் ஆசையைச் சொன்னேன். அவரும் ஒத்துக்கொண்டார்.

சில ஆண்டுகள் ஆகிவிட்டன. நான் அவ்வப்போது அதுபற்றிக் கேட்டு அவரை நச்சரித்துக்கொண்டே இருந்தேன்.

அது பொறுக்கமுடியாமலோ என்னவோ யுகபாரதி நூலைத் தயார் செய்துவிட்டார். விரைவில் அது உங்களுக்குக் கிடைக்கும், இன்ஷா அல்லாஹ்.

நான் கொடுத்த ஜஃபருல்லா நானாவின் வண்ண நிழல் படத்தை முன் அட்டையில் போட்டுள்ளோம்.

ஜஃபருல்லா நானா அவர் வீட்டில் எப்போதும், ஹஜ்ரத் மாமாவைப்போல, ஒரு சாய்வு நாற்காலியில்தான் அமர்ந்திருப்பார்.

அவருக்கு வாய் பேசமுடியாமல் ஆனபோதுகூட அதில் அமர்ந்துதான் என் ‘இலியட்’ காவியத்தை எடுத்துக்காட்டி என்னென்னவோ சொன்னார்!

நான் அக்காவியத்தைத் தமிழ்ப்படுத்தியதை சிலாகித்துத்தான் மகிழ்ந்து என்னவோ சொல்கிறார் என்று புரிந்துகொண்டேன்.

அந்தக்காட்சியை இப்போது நினைக்கும்போதுகூட கண்ணீர் முட்டுகிறது.

கவிதைநூலுக்குத் தலைப்பு நான் வைத்ததுதான். அவர் வீட்டில் எப்போதும் சாய்வு நாற்காலியிலேயே உட்கார்ந்திருந்தார். அவரை ‘ரிலாக்ஸ்’ செய்தது அதுதான்.

எனவே கவிதை நூலுக்கு ‘என் சாய்வு நாற்காலி’ என்று நானே தலைப்பு கொடுத்துவிட்டேன். ஆனால் அவர் அந்த துணி சாய்வு நாற்காலியில் அமர்ந்திருக்கும் ஒளிப்படம் கிடைக்கவில்லை.

இந்த நூலில் ஜஃபருல்லா நானாவின் எல்லாக்கவிதைகளும் உள்ளன. விரைவில் நூல் வெளிவரும். இன்ஷா அல்லாஹ், வாங்கிப்படித்துப் பாருங்கள்.

# ஆருயிரே யசோதரா

தொண்டைக் குழிக்குள்
அடக்கம் செய்யப்பட்ட குரல்
எதுவாக இருக்கும்?

உடைபட்ட முடிக் கற்றைகள்
விரல்கள் முறிந்து சிந்திய ரத்தம்
ஸ்பரிசம் நின்று துவண்ட தாய்மை
வீங்கிய கண்கள்
ஒன்றிரண்டு புன்னகைகள்
எதுவாக இருக்கும்?

கடலில் மிதந்த காற்று
கூடாரத்தில் அகப்பட்ட பாய்
அழுகையிலிருந்து
புறப்பட்ட காதல்
படபடப்புடன் திறந்த நூல்கள்
எதுவாக இருக்கும்?

உண்மைக்குப்
பின்னாலான தூண்டில்
அன்றையக் கனவின் அதிகாலை
விடை பெறுவதற்கு
முன்பான நிமிடம்
எதுவாக இருக்கும்?

கோர்க்கத் தொடங்கிய
மணிகள்
அந்தப் போதியின் அடி
எதுவாக இருக்கும்
ஆருயிரே யசோதரா?

-நபீல்-

# அரசகரும மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்தல் தொடர்பான விழிப்புணர்வு



(எம்.எம்.றம்ஸீன்)

அரசகரும மொழிகள் தினத்தினை நடைமுறைப்படுத்தும் முகமாக மாவட்ட செயலகத்திலுள்ள அனைத்து கிளைகளிலுமுள்ள அரச உத்தியோகத்தர்களுக்கு அரசகரும மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்தல் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் கடந்த வியாழக்கிழமை(25) திருகோணமலை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ். சுதாகரன் தலைமையில் மாவட்ட செயலக பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது.

அரசகரும மொழிகள் வாரம் மற்றும் தினத்தினை முன்னிட்டு பொது நிருவாக உள்நாட்டலுவல்கள், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் நாடளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற இந்நிகழ்வின் முதல் நாள் நிகழ்வாக அரச அலுவலகங்களில் பணியாற்றுகின்ற அரச உத்தியோகத்தர்களுக்கான அரசகரும மொழிக்கொள்கை தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மொழிக் கொள்கையைக் கொண்டிருப்பதன் முக்கியத்துவம், மொழிக்கொள்கையை நடைமுறைப்படுத்தல் மற்றும் அது தொடர்பான சட்டங்கள் போன்ற பல விடயங்கள் இதன் போது கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் திட்டமிடல் பணிப்பாளரும் சட்டத்தரணியுமான ஏ.சி.எம் முஸில் அவர்களினால் தெளிவூட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# சஜித்துடன் இணைந்து கொண்ட பாராளுமன்ற விவகாரச் செயலாளர்

(ஐ. ஏ. காதிர் கான் )

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்தபோது, அவரது பாராளுமன்ற விவகாரச் செயலாளராகக் கடமையாற்றிய குமாரசிறி ஹெட்டிகே, மஹிந்த ராஜபக்ஷவிடமிருந்து விலகி, சஜித் பிரேமதாஸவுடன் இணைந்து கொண்டார் .

இதனையடுத்து ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாஸ அவரை மாத்தறை மாவட்ட அமைப்பாளர் பதவிக்கு நியமித்துள்ளார்.

குமாரசிறி ஹெட்டிகே, பல தசாப்தங்களாக அரசியல் விவகாரங்களில் மஹிந்த ராஜபக்ஷ வுடன் மிகவும் நெருக்கமாக இருந்து நம்பிக்கையாக செயலாற்றிய ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# உக்குவளை வீதி புனரமைப்பு

உக்குவளை மாருகொன மையவாடிக்குச் செல்லும் மற்றும் சுதுகங்கை ஆற்றுக்கு நீராடச் செல்லும் பிரதான பாதை அண்மைக்காலமாக பழுதடைந்து காணப்பட்டதையடுத்து அனர்த்த நிவாரன மத்திய நிலைய சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஆகியோர் இப்பாதையின் நிலைமை பற்றி அறிந்து சென்றதனையடுத்து ஒன்பது இலட்சம் ரூபா பிரதேச செயலக இதற்கென ஒதுக்கப்பட்ட நிதியில் இருந்து புனரமைப்பு செய்யப் பட இருப்பதாக நலப்புரிச் சங்கத் தலைவர் ஏ.ஆர்.சாஹுல் ஹமீட் தெரிவித்தார்.

# அட்டாளைசேனையில் ஸ்மார்ட் வகுப்பறை திறப்பு விழா

(எம். எப். றியாஸ்)



பிரபஞ்சம் வேலைத் திட்டத்தின் கீழ் அட்டாளைச்சேனை கோணாவத்தை அந்நூர் மகா வித்தியாலயத்திற்கு ஸ்மார்ட் வகுப்பறை திறந்து வைக்கும் நிகழ்வு எதிர்வரும் 29ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 11மணிக்கு இடம்பெறவுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொத்துவில் தொகுதி அமைப்பாளர் எம்.ஐ.ஏ. ஆர். புஹாரியின் வேண்டுகோளுக் கிணங்க கட்சியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான சஜித் பிரேமதாஸ பிரதம அதிதியாகக் கலந்து கொள்ளவுள்ளார்.

கடந்த காலங்களில் அமைப்பாளர் புஹாரியின் சிபாரிசுக்கமைய ஒரு சில பாடசாலைகளுக்கு பஸ்வண்டிகள் வழங்கி வைத்ததுடன் எதிர் காலத்தில் இன்னும் பல பாடசாலைகளுக்கு பஸ் வண்டிகள் வழங்கவுள்ளதாகவும் ஐக்கிய மக்கள் சக்தியின் பொத்துவில் தொகுதி அமைப்பாளர் புஹாரி மேலும் தெரிவித்தார்.

# பாடசாலை மாணவர் தலைவர்களுக்கு சின்னம் சூட்டும் விழா

(அஸ்ஹர் இப்றாஹிம்)



புதிதாக தெரிவுசெய்யப்பட்டுள்ள மாணவத் தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் விழா கடந்த புதன்கிழமை (24 பாடசாலை முன்றலில் நடைபெற்றது.

பாடசாலையின் அதிபர் எம்.ஐ.எம். இல்யாஸ் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் பிரதம அதிதியாக இப்பாடசாலையின் பழைய மாணவரும் இலங்கை தென் கிழக்கு பல்கலைக்கழக பொறியியற் பீட விரிவுரையாளருமான பொறியியலாளர் ஏ.எம். அஸ்லம் ஸஜா கௌரவ அதிதியாக பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழுவின் செயலாளரும் கல்முனை வீதி அபிவிருத்தி அதிகார சபையின் செயற்றிட்ட பொறியியலாளருமான எம்.ஐ.எம். றியாஸ் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

# வடமேல் மாகாணத்தை பொருளாதார கேந்திரமாக மாற்றுவதற்கு அனைவரின் ஒத்துழைப்பும் அவசியம்

## ஆளுனர் நஸீர் அஹமட் வலியுறுத்தல்

இலங்கையின் முக்கிய பொருளாதார கேந்திரமாக வடமேல் மாகாணத்தை மாற்றுவதற்கு அனைவரின் ஒத்துழைப்பும் அவசியம் என்று வடமேல் மாகாண ஆளுனர் நஸீர் அஹமட் அவர்கள் வலியுறுத்தினார்.

வடமேல் மாகாண வர்த்தக வசதிகள் மேம்பாட்டுக்கான ஒன்றியத்தின் முக்கிய கலந்துரையாடல் ஒன்று (25) குருநாகல் லிச்சவி மண்டபத்தில் ஆளுனர் நஸீர் அஹமட் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர்,

வடமேல் மாகாணத்தில் அனைத்து வளங்களும் தாராளமாக காணப்படுகின்றது. தேவையான நிலம், கட்டிடங்கள், நீரியல் வளங்கள், சுற்றுலாத் தலங்கள் உள்ளிட்ட பலவேறு வளங்கள், மனிதவளம் என அனைத்தும் இருந்தும் மாகாணம் அபிவிருத்தியில் போதிய மேம்பாட்டினை அடையவில்லை.

பல்வேறு காரணிகள் அதற்கான தடைக்கல்லாக அமைந்துள்ளன. அவற்றைக் களைவதுடன், மாகாணத்தின் பொருளாதார மேம்பாட்டுக்கு வழிசெய்யும் வகையில் அரசாங்கத்தின் தலையீடு இன்றி வர்த்தக நடவடிக்கைகளை மேம்படுத்திக்கொள்வதற்கான பின்புலம் உருவாக்கப்பட வேண்டும்.

இன்று அதிகாரத்தில் இருப்பவர்கள் நாளை மாறலாம். ஆனால் அரசாங்கத்தின் கொள்கைகள் மற்றும் அணுகுமுறைகள் மாற்றமடையக் கூடாது. பொருளாதார செயற்பாடுகளில் மாற்றம் ஏற்படக் கூடாது. அவ்வாறான பின்புலம் உருவாக்கப்படும் பட்சத்தில் மாத்திரமே சுதந்திரமான வர்த்தக, பொருளாதார செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும், நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் வகையிலான செயற்பாடுகளை முன்னெடுக்க முடியும். வர்த்தகர்களும் அவ்வாறான செயற்பாடுகளை முன்கொண்டு செல்லும் வகையில் ஊக்கம் பெறுவார்கள்.

இவ்வாறான செயற்பாடுகளை முன்கொண்டு செல்வதற்காகவும் ஒருங்கிணைப்பதற்காகவும், வடமேல் மாகாணத்தின் அபிவிருத்திக்கான விசேட செயலணி ஒன்றையும், சிக்கல்களைத் தீர்ப்பதற்கான ஒருங்கிணைப்புக்குழு ஒன்றையும் தாபிப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளோம்.

குறித்த செயலணி மற்றும் ஒருங்கிணைப்புக்குழு என்பவற்றின் செயற்பாடுகள் தொடர்பில் மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும். அவற்றுடன் இங்குள்ள வர்த்தகர்களின் கருத்துக்களும் உள்வாங்கப்பட்டு, வர்த்தக மேம்பாட்டு நடவடிக்கைகள் முன்கொண்டுசெல்லப்படவேண்டும்



வடமேல் மாகாணத்தின் பொருளாதார மேம்பாட்டுக்கான இலக்கை அடைந்து கொள்ளும் நோக்கில் எதிர்வரும் நாட்களில் குறைந்த பட்சம் நூற்றுக்கும் மேற்பட்ட சர்வதேச முதலீட்டாளர்கள் மற்றும் நானூறுக்கும் மேற்பட்ட உள்நாட்டு முதலீட்டாளர்களைக் கவர்ந்திழுக்கும் செயற்பாடுகளையும் முன்கொண்டு செல்லவுள்ளோம்.

இவ்வாறான செயற்பாடுகளுக்கு மாகாணத்தின் அனைத்து அரச நிறுவனங்கள், அதிகாரிகள் தங்கள் ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்றும் ஆளுனர் நஸீர் அஹமட் வலியுறுத்தினார்.

# போதை பொருட்களின் பாவனை தொடர்பான விழிப்புணர்வு செயலமர்வு

போதை பொருட்களின் விபரீதங்கள் பற்றிய பெற்றோர்களை அறிவுறுத்தும் முக்கிய கூட்டமொன்று உக்குவளை அஜ்மீர் தேசிய பாடசாலை மண்டபத்தில் அதன் அதிபர் எம்.சருக்கின் தலைமையில் நடைபெற்றது.

இப்பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில் மாத்தளை ஐபி பொலிஸ் குற்றத் தடுப்பு அதிகாரி ஜயசேக்கர போதை பொருட்களின் விபரீதங்கள் பற்றியும் அதிலிருந்து மாணவ சமூகத்தைக் காப்பாற்றுவதெப்படி என்றவகையில் நீண்டநேர அறிவுறுத்தல்களைச் செய்ததையும் கலந்துகொண்டவர்களையும் காணலாம்.

# திருகோணமலை, குச்சவெளியில் பதற்றம்



(அஸ்ஹர் இப்றாஹிம்)

திருகோணமலை இலந்தைக்குளம் பகுதியில் பொதுமக்களுக்கு சொந்தமான வயல் காணிகள் துப்புரவு செய்யப்படுவதால் அங்கு (26) பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது.

குச்சவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இலந்தைக்குளம் 5ஆம் கட்டைப்பகுதியிலுள்ள விகாரையின் விகாராதிபதி குச்சவெளியான் குளத்து பொதுமக்களுக்கு சொந்தமான விவசாய நிலங்களை ஜே.சி.பி இயந்திரம் மூலம் துப்புரவு செய்து வருவதாகவும் அப்பகுதியிலுள்ள காணி உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக பாதிக்கப்பட்ட காணி உரிமையாளர்கள் குச்சவெளி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ள நிலையில் ஜனாதிபதி செயலகத்துக்கு அறிவித்துள்ளதாகவும் குச்சவெளி பிரதேசத்திற்கு பொறுப்பான அரசியல்வாதியொருவர் தெரிவித்தார்.

இலந்தைக்குளம் பகுதியில் காலாகாலமாக வாழ்ந்து வந்த மக்கள் யுத்தத்தின் காரணமாக 1990ஆம் ஆண்டு மற்றும் அதனை அண்டிய காலப்பகுதிகளில் இடம் பெயர்ந்திருந்ததாகவும், அப்பகுதியில் மீள குடியமர்வதற்கான கோரிக்கையை சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் நீண்டகாலமாக முன்வைத்து வருவதாகவும் இந்நிலையில் ஆக்கிரமிக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

மண்வெட்டிக்காக பிடிக்கம்பு வெட்டினாலே கைது செய்து சட்ட நடவடிக்கை எடுக்கும் அரச திணைக்கள அதிகாரிகள் பாரிய இயந்திரங்களினாலும், இயந்திர கை வாள்களினாலும் பாரிய பச்சை மரங்களை வெட்டி அழிப்பதற்கு எதிராக ஏன் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

# சுவர்ணபுரவர தேசிய விருது பெற்ற கல்முனை மாநகர சபை

(எம்.எம்.றம்ஸீன்)

நாட்டிலுள்ள மாநகர சபைகளுக்கிடையே நடாத்தப்பட்ட செயற்திறன் மதிப்பீட்டில் கிழக்கு மாகாண மட்டத்தில் முதலிடத்தையும் தேசிய ரீதியில் இரண்டாம் இடத்தையும் பெற்றுக் கொண்ட கல்முனை மாநகர சபைக்கு சுவர்ணபுரவர தேசிய விருது அண்மையில் வழங்கி வைக்கப்பட்டது.

பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையில் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

உள்ளூராட்சி, மாகாண சபைகள் இராஜாங்க அமைச்சர் ஜனக வக்கும்பர, அவுஸ்திரேலியா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளின் உயர்ஸ்தானிகர்கள், உலக வங்கி மற்றும் ஆஷியா பவுண்டேஷன் என்பவற்றின்



இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதிகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் ஆகியோர் இணைந்து கல்முனை மாநகர ஆணையாளர் என்.எம். நௌபீஸிடம் இவ்விருதைப் வழங்கி வைத்தனர்.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரும் மாகாண முதலமைச்சு மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருமான என். மணிவண்ணன் மற்றும் கல்முனை மாநகர சபையின் சார்பில் உதவி ஆணையாளர் ஏ.எஸ். எம். அஸீம், சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.எம்.சாஹிர் ஆகியோரும் பங்கேற்றிருந்தனர்.

தேசிய பத்திரிகையாக (மின்னிதழ்) வெளிவருகின்ற **“உதயம்”** பத்திரிகைக்கு தங்களின் பேராதரவை எதிர்பார்ப்பதுடன் கீழுள்ள QR ஐ Scan செய்வதனூடாக எமது வட்ஸ்அப் குழுமத்தில் இணைந்து ஒவ்வொரு வெளியீட்டின் பிரதிகளையும் இலவசமாக பார்வையிடலாம்...

# சவுதி அரேபியாவுக்கான இலங்கைத் தூதுவரினால் மதீனா கவர்னருக்கு “போகன்விளா” செடிகள் அன்பளிப்பு



சவுதி அரேபியாவுக்கான இலங்கைத் தூதுவர் உமர் லெப்பை அமீர் அஜ்வத் அவர்கள் மதீனா கவர்னர் மாண்புமிகு இளவரசர் சல்மான் பின் சுல்தான் பின் அப்துல் அஸீஸ் அவர்களுக்கு புனித மதீனா நகரில் நடுவதற்காக இலங்கையின் “போகன்விளா“ செடிகளை அன்பளிப்புச் செய்தார். இதன் மூலம் தூதுவர் அவர்கள் சவுதி அரேபியாவின் 2030 இலக்குகளை அடைவதை நோக்காகக் கொண்டு மாண்புமிகு முடிக்குரிய இளவரசர் முஹம்மத் பின் சல்மான் அவர்களால் முன்னெடுக்கப்பட்டுள்ள சவுதி அரேபியாவின் பசுமை சார் முன்னெடுப்புகளுக்கு ஆதரவு வழங்குவதற்கான இலங்கையின் நல்லெண்ணத்தை வெளிப்படுத்தினார். அண்மையில் மதீனா மாநகர சபை "Here It Was Planted" என்ற மகுடம் தாங்கி ஒரு மர நடுகை நிகழ்வினை ஏற்பாடு செய்திருந்தது. அதன்போது குறித்த பிராந்தியத்தின் காலநிலை மற்றும் சுற்றாடலுக்கு பொருத்தமான செடியாக “போகன்விளா“ தெரிவு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

சவுதி அரேபியாவின் பசுமை சார் முன்னெடுப்பானது (SGI) காலநிலை மாற்றம், பச்சை வீட்டுத் தாக்கத்தை குறைத்தல் மற்றும் தூய்மையான வலுப் பயன்பாட்டை அதிகரித்தல் போன்றவற்றை மையப்படுத்தி 10 பில்லியன் மரங்களை நாடு பூராகவும் வளர்ப்பதை நோக்காகக் கொண்டிருக்கின்றது. இந்த அன்பளிப்பின் மூலம் உயிர்ப் பல்வகைமை கொண்ட ஒரு நாடு என்ற வகையில் இலங்கையின் பூரண ஆதரவை சவுதி அரேபியாவின் பசுமை சார் முன்னெடுப்புகளுக்கு வழங்க முடியும் என இலங்கைத் தூதுவர் அமீர் அஜ்வத் அவர்கள் சுட்டிக்காட்டினார்.

சவுதி அரேபியாவுக்கான இலங்கைத் தூதுவராகப் பதவியேற்ற பின்னரான தனது முதலாவது உத்தியோகபூர்வ விஜயத்தை புனித மதீனா முனவ்வரா நகருக்கு மேற்கொண்ட தூதுவர் அவர்கள் மதீனா மாகாண ஆளுநர் அவர்களுடனான சிநேகபூர்வமான சந்திப்பொன்றையும் மேற்கொண்டார். மேலும் இச்சந்திப்பானது இரு நாடுகளுக்குமிடையிலான இராஜதந்திர உறவுகள் கட்டியெழுப்பப்பட்டு 50 ஆண்டுகள் நிறைவடைகின்ற சந்தர்ப்பத்தில் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

சவுதி அரேபியாவுக்கும் இலங்கைக்குமிடையிலான வரலாற்று ரீதியான உறவுகளைத் தொட்டுக்காட்டிய தூதுவர் அமீர் அஜ்வத் அவர்கள் இரு நாடுகளுக்குமிடையிலான நவீன இராஜதந்திர உறவுகள் 1974 ஆம் ஆண்டு முதல் கட்டியெழுப்பப்பட்ட போதிலும் இரு நாடுகளுக்குமிடையிலான புராதன கால இராஜதந்திர உறவுகள் கி.பி. 7ம் நூற்றாண்டுகளிலேயே ஆரம்பித்துவிட்டது என்பதையும் நினைவு படுத்தினார். கி.பி. 7ம் நூற்றாண்டுகளில் அனுராதபுரத்தை ஆட்சி செய்த மூன்றாம் அகபோதி மன்னன் (கி.பி. 623 - 640) இலங்கையில் வாழ்ந்து வந்த அரேபியர்களின் வேண்டுகோளின் பேரில் மதீனாவை நோக்கி முஹம்மத் நபி (ஸல்) அவர்களது காலத்தில் இஸ்லாம் மதத்தை அறிந்து கொள்வதற்காக ஒரு தூதுவரை அனுப்பி வைத்த வரலாற்றை மதீனா கவர்னர் மாண்புமிகு இளவரசர் சல்மான் பின் சுல்தான் பின் அப்துல் அஸீஸ் அவர்களுக்கு எடுத்துரைத்தார். அக்கால அரேபியர்களால் இலங்கை “செரண்டிப்“ என அழைக்கப்பட்டது.

இந்த வராற்றுப் பின்னணி கொண்ட மதீனா நகருக்கான தனது விஜயம் உணர்வுபூர்வமான பெறுமானங்களைக் கொண்டிருப்பதாகவும் தூதுவர் அமீர் அஜ்வத் அவர்கள் சுட்டிக் காட்டினார்.

## மனநலமும் ஆலோசனையும் 41



# சுய மரியாதை

நாம் மற்றவருக்கு மரியாதை செலுத்துவதன் அவசியம் பற்றி கதைக்கிறோம். மரியாதையின் தேவையை அதன் முக்கியத்துவத்தை மற்றவர்களுக்கு விளங்க வைக்கிறோம். மரியாதை செலுத்துவதன் அவசியம் பற்றி பிள்ளைகளுக்கு சொல்லிக் கொடுக்கின்றோம். ஆனால் எமக்கு நாம் மரியாதை செலுத்துவதை பல சந்தர்ப்பங்களில் மறந்து விடுகிறோம்.

ஒருவர் அவர் மீது செலுத்தும் மரியாதையை அல்லது கௌரவத்தை சுயமரியாதை என்று அழைக்கப்படுகிறது. நாம் நம்மீது மரியாதை செய்ய வேண்டுமா?

நாம் நம்மீது கௌரவம் செலுத்த வேண்டுமா? என்ற கேள்விகள் சாதாரணமாக எமக்குள் உருவாகலாம். இது பற்றி சுருக்கமாக தெரிந்து கொள்ள முயற்சிப்போம்.

மனோதத்துவ வல்லுநர்கள் சுயமரியாதையை பல வழிகளில் வரையறுத்துள்ளனர். குறிப்பாக, சுய மரியாதை என்பது அல்லது நாம் எம்மீது மரியாதை செலுத்துவது என்பது

- எங்கள் தேவைகள் மற்றும் ஆசைகளை மதிப்பது,
- எங்கள் மதிப்பைப் புரிந்துகொள்வது
- எங்கள் கண்ணியத்தை பாதுகாத்துக்கொள்வது
- எங்களுக்கு அவசியமான தேர்வுகளை தெரிவுசெய்வது
- எங்கள் தனித்துவத்தின் தன்மையை புரிந்து அதை மதித்து வாழ்வது

என்று வரையறுத்து கூறுகின்றனர்.

சுயமரியாதை ஒவ்வொரு மனிதனுக்கும் முக்கியமானது, ஏனெனில் இது சவால்களை சமாளிக்கவும்,

மன தைரியாத்தை உருவாக்கவும்,

உணர்ச்சி ஆரோக்கியத்தை பராமரிக்கவும்

பெரிதும் உதவுகிறது.

சுயமரியாதை என்பது நாம் எம்மை எவ்வளவு புரிந்து கொள்கிறோம் மற்றும் எம்மை எவ்வளவு கவனமாக பராமரிக்கிறோம் என்பவற்றுடன் நெருங்கிய தொடர்புடையது என்று ஆராய்ச்சிகள் எடுத்துக் காட்டுவதை காணலாம்.

எங்களை உண்மையான முறையில் நேசிப்பது,

எங்களை கவனமாக நடத்துவது

எங்கள் மதிப்புகளுக்கும் நடத்தைகளுக்கும் உண்மையாக இருப்பது எல்லாம் சுயமரியாதையில் அடங்கும் முக்கிய அம்சங்களாகும்.

எங்கள் நம்பிக்கைகள் மற்றும் மதிப்புகளுக்கு இசைவாக எவ்வளவு உண்மையாக ஈடுபடுகிறோமோ அவ்வளவு அதிகமாக நாங்கள் நிறைவாகவும் நம்பிக்கையுடனும் இருக்கத் தொடங்குவோம். இதுதான் எங்கள் நல்வாழ்வை மேம்படுத்தும் அத்திவாரமாகும்.

எங்களை நாம் மதிக்கும்போது எங்களையும் எங்கள் வாழ்க்கையையும் மற்றவர்களுடன் ஒப்பிட்டுப் பார்ப்பதில் இருந்து தவிர்ந்து கொள்கிறோம். எங்கள் இயல்பான நிலையை புரிந்து கொள்கிறோம்.

எங்கள் வாழ்க்கையின் பொருள் புரிந்து வாழ முயற்சிக்கிறோம்

எம்மீது நாம் மரியாதை காட்டுவதை அகங்காரமாக நினைக்கக் கூடாது. மாறாக, இது மனிதர்களாகிய எங்களுக்கு ஆரோக்கியமான எல்லைகளை நிறுவவும், எதிர்மறை எண்ணங்களை விலக்கி வைக்கவும், எங்களை நாம் உயர்வான மேன்மையான மனிதர்களாக பார்க்கவும் எங்களை தெரிந்து, காத்து, கவனித்து அழகாகவும் ஆரோக்கியமாகவும் வாழ வழிகாட்டும் உயர்ந்த நிலையாகும்.



**அஸ்ஹர் அன்ஸார் FRSPH (UK)**
**மனோதத்துவ ஆலோசனை நிபுணர்**
**மனோதத்துவ எழுத்தாளர்**

# அகில இலங்கை சமாதான நீதிவானாக நியமனம்



*யாழ்ப்பாணம் சோனகத் தெருவைச் சேர்ந்த கலாபூஷணம் பரீட் இக்பால் அகில இலங்கை சமாதான நீதிவானாக நியமனம் பெற்றுள்ளார்.*

*இவர் யாழ்ப்பாணம் மஸ்ற உத்தீன் பாடசாலை, ஒஸ்மானியா கல்லூரி பழைய மாணவராவார்.*

*இவர் யாழ்ப்பாணம் சோனகத் தெருவைச் சேர்ந்த மர்ஹூம்களான பரீட்-றஸீனா தம்பதியரின் மூத்த புதல்வராவார்.*

# உலகின் சக்திவாய்ந்த கடவுச்சீட்டு தரவரிசைப் பட்டியலில் சிங்கப்பூர் முதலிடத்தில்: இலங்கை 84 ஆவது இடத்தில்

**(ஐ.ஏ. காதிர் கான்)**

*உலகின் மிகவும் சக்திவாய்ந்த கடவுச்சீட்டு தரவரிசைப் பட்டியலில் சிங்கப்பூர் முதலிடத்தைப் பிடித்துள்ளது. அந்தவகையில், சிங்கப்பூர் கடவுச்சீட்டைப் பயன்படுத்தி 195 நாடுகளுக்கு விசா இல்லாமல் பயணிக்க முடியும் என தெரிவிக்கப்படுகிறது.*

*இதில் இலங்கை கடவுச்சீட்டு, 84 ஆவது இடத்தைப் பிடித்துள்ளது. சர்வதேச விமானப் போக்குவரத்துச் சங்கத்தின் தரவுகளின் அடிப்படையில், உலகின் சக்திவாய்ந்த 199 நாடுகளின் கடவுச்சீட்டுக்களின் தரவரிசையை "ஹென்லி பாஸ்போர்ட் இன்டெக்ஸ்" தற்போது வெளியிட்டுள்ளது.*

*மேலும், பிரான்ஸ், இத்தாலி, ஜேர்மனி, ஜப்பான் மற்றும் ஸ்பெயின் ஆகிய நாடுகள் இந்த தரவரிசையில் இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளன.*

*இந்த நாடுகளின் கடவுச்சீட்டுக்களைப் பயன்படுத்தி 192 நாடுகளுக்கு விசா இல்லாமல் பயணிக்க முடியும்.*







**பயாஸா பாஸில்**

கணவன் மனைவி இருவரும் ...

ஒரு ஹோட்டலில் ஐஸ்கிரீம் சாப்பிட உட்கார்ந்தார்கள்.

என்னங்க... உங்ககிட்ட ஒரு விஷயம் கேட்கணும்போல இருக்கு கேட்கவா....

இதென்ன புதுசா .. என்கிட்ட கேட்டா என்கிட்ட பேசுவா.... கேளு என சிரிச்சான்

இல்ல, ஒரு மாசமா சீக்கிரம் வீட்டுக்கு வரீங்க...

அடிக்கடி வெளிய கூட்டிப்போறீங்க..

பொண்ணு கூட உட்கார்ந்து பாடம் சொல்லி குடுக்றீங்க.....

திடீரென நம்ம மேல நெருக்கமா மாறிட்டீங்க....

அதான்...

என்று இழுத்தாள்...

ஒண்ணுமில்லையே எப்பவும் போலத்தான் இருக்கேன்.

மறைக்காதீங்க ... உங்க முகரைய பார்த்தாலே தெரியுது... சொல்லுங்க

என்னத்த சொல்ல..

ஏதும் சின்னவீடு செட் பண்ணிட்டிங்களா ..

அத மறைக்கத்தான் இப்படி கொஞ்சுறிங்களா நம்மகூட?

போடி லூசு.. அவன் சிரித்தான்.

ஆனால், அதில் உயிரில்லை.

மெதுவாய் சொன்னான்..

நீயா கேட்பே சொல்லணும்னுதான் இருந்தேன் என கொஞ்சம் சீரியஸ் ஆனான்.

என்னங்க ஏதும் பிரச்சினையா படபடத்தாள்....

அவன் இல்லையென தலையாட்டியபடியே

அவனது அலுவலக பையை திறந்தான்.

ஒரு டைரியை திறந்து ஒரு பேப்பரை எடுத்து நீட்டினான்.

என்னங்க இது ..

படி என சொல்லிவிட்டு பின்னால் நகர்ந்து அமர்ந்தான்.

அவள் படிக்க தொடங்கினாள் ...

அவன் கண்கள் கண்ணீரை சிந்த ஆரம்பித்தது...

அன்புள்ள மகனுக்கு,

கண்டிப்பா என்றைக்காச்சும் இந்த கடிதம் உன் கையில கிடைக்கும்னு நான் நம்புறேன்.

உங்கப்பாவுக்கு மனைவியா உனக்கு அம்மாவ இந்த கடிதம் எழுதுறேன்.

ரொம்ப பெரிய கடிதம் பொறுமையா படி.

அவசரமா வேலை இருக்குனு பாதி படிச்சி மீதிய இன்னொரு நாள் காத்திருந்துப் படிக்காத.

உங்கப்பாவ நான் கல்யாணம் பண்ணும்போது நான் காலேஜ் லெக்சரர்.

அப்புறம் நீ வந்த பிறகு உங்கப்பாக்கு அதிர்ஷ்டம் அடிச்சுது.

இன்னும் கன்ஸ்ட்ரக்ஷன்ல வளர்ந்தாரு.

அப்புறம் உன் தங்கச்சி பிறந்தா ...

நான் வேலையை விட்டுட்டு வீட்டோட உங்கள கவனிச்சுட்டு இருந்தேன்.

உனக்கு தான் தெரியுமே அப்பா எப்படி பிசின்னு...

கல்யாணம் ஆன ஒரு வருஷம் தான் கனவு வாழ்க்கை.

அப்புறம் எல்லாமே காத்திருந்த வாழ்க்கைதான்.

உங்கப்பாவுக்கு காத்திட்டு இருந்தேன்.

அவர், அவர் உருவாக்க நினைச்ச ஆடம்பர வாழ்க்கைக்காக உழைச்சிட்டு இருந்தார்.

நீங்கள் ரெண்டு பேரும் தான் எனக்கு துணை.

நாம தான் விளையாடுவோம்.

அப்புறம் நீங்க ஸ்கூலுக்கு போய்ட்டீங்க.. நீங்க வரதுக்கு காத்திட்டுருப்பேன்.

ஸ்கூல்விட்டு வந்ததும் கதைகதையா சொல்லுவீங்க..

அதுல பாதி பொய் இருக்கும்..

அதெல்லாம் உங்க கற்பனைன்னு நினைச்சு ரசிச்சேன்.

அப்புறம் நீங்க வளர்ந்தீங்க..

அம்மாட்ட சொல்ல ஏதுமில்லாம போச்சு.

ஆனா உங்கள்ட்ட இருந்து ஆர்டர் மட்டும் வந்துச்சு.

இப்ப வெளியே போகனும்...

இப்படி வெளியே போகணும்னு..

ஆனா வர்ற டைம் கேட்க முடியுமா அம்மாவால்.......

காத்திட்டு இருப்பேன்.

நீங்க சாப்டு வரீங்களா.... சாப்டமா வரீங்களானு பார்க்க காத்திட்டு இருப்பேன்....

நீங்க எக்ஸ்ட்ரா கோச்சிங், பிரண்ட்ஸ் அரட்டைனு..பிசி

இடையில உங்கப்பா உடம்பு முடியாம படுத்துட்டாரு.

அவருக்கு டயத்துக்கு மாத்திரை கொடுக்கனும், மருந்து கொடுக்கணும், பிசியோதெரபி பண்ணனும் காத்திட்டுருப்பேன்.

காத்திட்டு இருக்கிறதே என்னோட வாழ்க்கை ஆகிடுச்சு பாத்தியா?

அப்புறம் உன தங்கச்சி கல்யாணம்...

இப்ப அவ எப்படி இருக்கானு கூட

அவளா முடிவு செய்ற நேரத்திலதான் என் கூட பேச முடியும்..

ஏன்னா அங்க அவ காத்திட்டு இருக்கா .... ஒரு அம்மாவா...

உனக்கு சொல்லவே வேண்டாம்...

அப்பா தொழில எடுத்து செய்ய ஆரம்பிச்ச உடனே

நீ ரொம்ப பிசியாகிட்ட..

நீ கடைசி ஐஞ்சு வருஷத்தில் அம்மாட்ட பேசுனத கொஞ்சம் யோசியேன்...

சாப்டிங்களா, மாத்திர போட்டாச்சா.. ஊசிபோட்டாச்சா... இவ்ளோதான்.

உங்கப்பா வாழ்றா காலத்தில பிசியா இருந்தாரு..

நான் காத்திட்டு இருந்தேன்.

கடைசி காலத்தில் ஏதுவும் இல்லாம இருந்தாரு..

ஆனா மாத்திரைக்கு காத்திட்டு இருந்தாரு...

என்கிட்ட பேச அவருக்கு விசயமே இல்லை...

பேப்பர் படிச்சாரு. புக் படிச்சாரு. தூங்குனாரு.

ஏன்னா பேச வேண்டிய காலத்தில் பேசல...

பேச நேரமிருந்த காலத்தில் பேச விஷயமில்லை... அனுபவமும் இல்லை

இப்படித்தான் பெரும்பாலான அம்மாக்களோடு வாழ்க்கை முடிஞ்சு போகுது.

நாம என்னைக்காச்சும் வெளியே போகும் போது

அங்க நிறைய அம்மாக்கள பார்ப்பேன்..

அவங்க எல்லார் கண்ணிலும் எனக்கு தெரியுறது காத்திருந்த ஏக்கம் மட்டும் தான்.

உன்னை மாதிரி பசங்க கூட்டிட்டு வர அவங்க மனைவிகளை பார்ப்பேன்...

அதுல இன்னைகே வாழ்ந்துடனும்...

அடுத்த ஆறநாள் இவன் கூட பேசக்கூட முடியாதுன்ற ஒரு வேகம் இருக்கிறத பார்த்தேன்.

இன்னைக்கு ஒரு நாள் தானேன்னு புள்ளைக கேட்ட எல்லாம் செய்ற அப்பாக்கள பார்த்தேன்.

இது கொஞ்சம் கொஞ்சமா அவங்களுக்கு காரியம் சாதிக்கிற நாள் ஆகிடுதுனு புரிஞ்சுது...

உங்களுக்கு ஒரு நாள் தானேன்னு ஒரு நினைப்பு வந்துடுச்சு.

இதெல்லாம் ஏன் இப்ப சொல்றேனு யோசிக்றியா...

என் காலத்தில் இதெல்லாம் உங்கப்பாட்ட சொல்லி புரிய வைக்க முடியல..

ஆனா நீ அடுத்த ஜெனரேஷன்.. கொஞ்சம் யோசிப்பில்ல

அதான் உன்கிட்ட சொல்றேன்.

நான் உயிரோடு இருக்கும் போது சொல்ல முடியல...

சொன்னாலும் உன்னால கேட்க முடியாது..

அதனால தான் இப்ப சொல்றேன்.

உனக்கு வீட்ல ஒரு பொண்ணு இருக்கா, மனைவி இருக்கா...

காத்திட்டு இருக்காங்க...

உன் தங்கச்சிக்கு உங்கப்பா மேல இருந்த

அடுத்த வாரம் தொடரும்...

# தர்கா நகரில் புலமையாளர்கள் கௌரவிப்பு





(பீ.எம்.முக்தார்)

தர்கா நகர் ஸாஹிரா அளுத்கம வீதிய முஸ்லிம் மகளிர் தேசிய பாடசாலை மற்றும் அல்-ஹம்ரா மகா வித்தியாலயம் ஆகியவற்றில் இம்முறை தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று (27) தர்கா நகர் லோடஸ் வீதியில் உள்ள நஜீப் ஹாஜியார் கல்வி நிலைய மண்டபத்தில் நடைபெற்றது.

தர்கா நகர் நஜீப் ஹாஜியார் கல்வி நிலையம் இந்த விழாவை ஏற்பாடு செய்திருந்தது.

மேற்படி கல்வி நிலைய ஸ்தாபகரும் பிரபல சமூக சேவையாளருமான கலாநிதி நஜீப் ஹாஜியார் பின் அமீர் ஆலிம் விழாவில் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் உப தலைவருமான எம்.எஸ்.எம்.அஸ்லம் ஹாஜியார், இலங்கை மருந்தாக்கக் கூட்டுத்தாபன முன்னாள் தலைவரும் டாக்டர் ரூமி ஹாஷிம் பவுண்டேஷன் தலைவருமான டாக்டர் ரூமி ஹாஷிம் ஆகியோர் விசேட அதிதிகளாக கலந்து கொண்டனர்.

பலபிட்டிய அஷ்ஷரியா மத்ரஸா அதிபர் மௌலவி முஹம்மத் நஸ்மி (முஸ்தபவி) விசேட சொற்பொழிவாற்றினார்.

மேற்படி கல்வி நிலையம் கடந்த 11 வருடங்களுக்கு மேலாக தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை கௌரவித்து பரிசில்களை வழங்கி வருகிறமை இங்கு குறிப்பிடத்தக்கது.

கடந்த காலத்தில் தரம் 5 புலமை பரிசில் பரீட்சைக்கு தர்கா நகரில் உள்ள மேற்படி பாடசாலைகளிலிருந்து தோற்றிய மாணவர்களுக்கு இந்த கல்வி நிலையம் இலவச கருத்தரங்குகளையும் நடத்தியமே விசேட அம்சமாகும்.

தர்கா நகரிலும்,களுத்துறை மாவட்டத்திலும் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் நஜீப் ஹாஜியார் கல்வி நிலையம் பாரிய கல்விப் பணிகளை செய்து வருகிறது.

கௌரவிப்பு நிகழ்வில் முன்னாள் பிரதேச சபை தலைவர் ஏ.ஆர்.எம்.பதியுத்தீன், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்களான முஹம்மது நபீல்,ஹசீப் மரிக்கார், தர்கா நகர் இஸ்லாமிய நலன்புரிச் சங்க தலைவர் அல்-ஹாஜ் ஏ.பீ.எம்.ஸுஹைர், ரூமி ஹாஷிம் பவுண்டேஷன் செயலாளர் ஜெஸீக் அஹமத், நஜீப் ஹாஜியார் கல்வி நிலைய பணிப்பாளர் சபை உறுப்பினர்களான ஏ.ஜே.எம்.அக்பர், டாக்டர் ரஹ்மதுல்லா நஜீப், டாக்டர் ஹுஸ்னா நஜீப் மற்றும் மௌலவி காரி எம்.எஸ்.எம்.
களீர் (கபூரி), தர்கா நகர் ஜமாத் கௌன் ஸில் முக்கியஸ்தர் முகியத்தீன் மாஸ்டர் உட்பட பாடசாலைகளின் அதிபர்கள்,ஊர் பி ரமுகர்கள்,பெற்றோர்கள்,மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

---

## அனைவரையும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என தெரிவித்த ஜனாதிபதி, பேசிகொண்டிருக்காமல் தனது கடமைகளை நிறைவேற்றுவதே தனது அரசியல் கொள்கையெனவும், நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதாக மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றுவதாகவும் உறுதியளித்தார்.

பல அரசியல் கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் 50 இற்கும் மேற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் அமைச்சர்கள்,காலி மாவட்டத்தைச் சேர்ந்த 15,000 இற்கும் அதிகமான மக்களும் அரசாங்கத்தின் எதிர்கால வேலைத்திட்டத்தை மக்களுக்கு அறிவிக்கும் இந்த மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

இவர்கள் ஜனாதிபதியின் வெற்றிக்காக தம்மை அர்ப்பணிப்பதாக உறுதிமொழிந்தனர்.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க,

காலி மாவட்டம் எனக்கு முக்கியமானது. எனது தந்தை வழிச் சமூகம் இங்கிருந்தே வருகிறது. இந்த நகரத்தோடு அந்த தொடர்பு உள்ளது. இந்த தீர்மானத்தை ஏற்றுக்கொள்ளும் முன்னதாக சிந்திக்க வேண்டியிருந்தது. இரண்டு வருடங்களுக்கு முன்பு இதனை விடவும் சிந்திக்க வேண்டிய நிலைமை காணப்பட்டது.

2022 ஆம் ஆண்டில் பிரதமர் பதவியை ஏற்க எவரும் இல்லாத நிலையிலேயே எனக்கு வழங்கப்பட்டது. தெற்காசியாவில் முதல் முறையாக பிரதமர் பதவி யாசகம் செய்தது. நீங்கள் அடைந்த துயரங்களைக் கண்டுதான் பதவியை ஏற்றுக்கொண்டேன். உரம், எரிபொருள், எரிவாயு, பாடசாலை செல்லவும் வழியிருக்கவில்லை. நாட்டை ஏற்று இரு வருடங்களில் அந்த நிலையை மாற்றிக் காட்டினேன்.

நீண்ட நேரம் பேசுபவன் நான் அல்ல. ஒரு வேலையை ஏற்றுகொண்டால் அதனை செய்து முடிப்பேன். கஷ்டமான காலத்திலேயே நாட்டை ஏற்றேன். உணவு பெற்றுத்தந்தோம். உரத்தை பெற்றுத்தந்தோம், சர்வதேச நாணய நிதியத்தின் பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜியாவாவிடம் உதவிகோரினேன். உலக வங்கியிடம் உதவி கோரினேன். ஜப்பானிடம் உதவி கோரினேன். இவ்வாறுதான் பயணத்தை முன்னெடுத்தேன்.

உதவியைப் பெற்றுக்கொண்டுதான் இன்றைய நிலைக்கு வந்துள்ளோம். வங்குரோத்து நிலையிலிருந்து மீண்டுள்ளோம். அதற்காக கஷ்டமான தீர்மானங்களை எடுத்தேன். 6 மாதங்களில் இந்த நிலையை மாற்ற முடியும் என்று நம்பினேன். கடன் பெற முடியாத வகையில் சட்டம் நிறைவேற்றப்பட்டது. ஆனால் ரூபாயின் பெறுமதி அதிகரித்துள்ளது. எரிபொருள் விலை குறைந்துள்ளது.

பல பிரச்சினைகள் இன்றும் உள்ளன. மக்கள் பல பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். வங்கிகளில் நகைகளை அடகு வைக்கும் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. ஆனால் பிரச்சினைகளுக்குப் படிப்படியாகத் தீர்வுகளை வழங்கி வருகிறோம். பொருளாதாரம் வலுவடையும் போது எமது கஷ்டங்களுக்கான தீர்வுகள் கிடைக்கும்.

எந்த அரசாங்கத்திலும் காணி உறுதிகள் உங்களுக்கு கிடைக்கவில்லை. முடிந்த வகையில் மக்களுக்கு நிவாரணம் வழங்குவோம். தோட்ட தொழிலாளர்கள் வசிக்கும் பகுதிகள் கிராமங்களாக மாற்றப்படும். பொது மக்களுக்கு உரிமை வழங்குவதே எனது நோக்கமாகும். அதனை கைவிடப்போவதில்லை. உங்களை செல்வந்தர்க்காக்கும் வரையில் இந்த வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படும்.

இவற்றுக்காக நாம் சர்வதேச நாணய நிதியத்துடன் செய்துக்கொண்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் செயற்பட வேண்டியது அவசியம். கடன் வழங்கிய நாடுகளின் நிபந்தனைகளுக்கு அமைவாக செயற்பட வேண்டிய அவசியமும் உள்ளது. அவற்றை சிதைத்துவிட்டு செல்ல முடியாது. அவ்வாறு செய்ய முடியும் என்று கூறினால் அது பொய்யானது. அவர்கள் நாட்டின் முன்னேற்றத்துக்கு தடையாக இருக்கின்றனர்.

அதனாலேயே எதிர்க்கட்சிகள் தமது நிலைப்பாட்டை அறிவிக்க வேண்டும் என்று கூறுகிறேன். எமக்கு இப்போது கிடைக்கும் நிதி கிடைக்காவிட்டால் மீண்டும் வரிசையில் நிற்கும் நிலை வரும். எனவே அரசியலுக்காக பொய்களைச் சொல்லி நாட்டை மீண்டும் வீழ்த்த வேண்டாமென கேட்டுக்கொள்கிறேன். நாடு சரிவடைந்த பின்னர் அதனை ஏற்றுக்கொள்ளாமல் ஓட்டம் பிடித்துவிடுவார்கள். ஒலிம்பிக் வீரர்களையும் மிஞ்சி ஓடுவார்கள்.

நாட்டுக்கு இன்னும் பல முதலீடுகளை கொண்டு வர வேண்டும். தொழிற்சாலைகளைக் கொண்டு வர வேண்டும். ஹோட்டல்களைக் கொண்டுவர வேண்டும். நாம் வலுவடைய வேண்டியது அவசியம். இன்று நாட்டின் மொத்த தேசிய உற்பத்தி 85 பில்லியன் டொலர்களாக காணப்படுகிறது. இந்த தசாப்தத்தின் இடைப்பகுதியில் அதனை 350 பில்லியன் டொலர்கள் வரையில் அதிகரிக்க வேண்டும். அதனை நான்கு மடங்காக அதிகரிக்கும் இயலுமை எம்மிடம் உள்ளது.

சீனா, சிங்கப்பூர், வியட்நாம் போன்ற நாடுகளால் முடியும் என்றால் எம்மாலும் செய்ய முடியும். இளையோரின் எதிர்காலம் பற்றி சிந்திக்க வேண்டும். போராட்டங்களை செய்துக்கொண்டிருப்பதில் பயனில்லை. எதிர்காலத்தில் இளையோரே நாட்டை ஏற்கப் போகிறார்கள். அவர்களின் எதிர்காலத்தைப் பற்றி கேள்வியெழுப்ப அவர்களுக்கு உரிமை உள்ளது போலவே, அவர்களுக்கு பதிலளிக்க நாமும் கடமைப் பட்டிருக்கிறோம்.

அவ்வாறான பயணத்தை செல்லவே இன்று நான் சுயாதீன வேட்பாளராக களமிறங்கியிருக்கிறேன். பழைய அரசியல் முறையிலிருந்து நாம் விடுபட வேண்டும். நான் அமைச்சுக்களைப் பகிர்ந்தளித்த போது அவர்களின் இயலுமையை அறிந்திருக்கவில்லை. ஆனால் திறமையாக செயற்படுவோர் இருக்கின்றனர் என்பது தெரிகிறது. அரசியலை பற்றி சிந்திக்காமல் நாம் செயலாற்றுகிறோம்.

அதனாலேயே நாட்டைக் கட்டியெழுப்ப முடிந்தது. புதிய முறையில் சிந்தித்து செயலாற்றினோம். நாட்டை நாம் பலப்படுத்த வேண்டும். எதிர்காலத்தைக் கட்டமைக்க வேண்டும். குறுகிய அரசியல் நோக்கங்களுடன் செயலாற்றக் கூடாது. சஜித் பிரேதமதாச, அனுரகுமார திசாநாயக்க போன்றவர்களின் நிலைப்பாடு என்ன? கட்சிகளை உடைப்பது எனது நோக்கமல்ல புதிய வகையில் சிந்தித்து அனைவரும் ஒன்றுபட்டுச் செல்ல வேண்டும் என்றே கூறுகிறேன்.

எமது இறுதி காலத்தில் அவற்றை செய்ய கடமை பட்டிருக்கிறோம். நான், மஹிந்த ராஜபக்ஷ, கரு ஜயசூரிய, சந்திரிகா, மைத்திரிபால சிறிசேன போன்றவர்கள் அரசியலில் இறுதி கட்டத்தை நெருக்கியிருக்கிறோம். எனவே முரண்பாடுகளை விடுத்து முன்னோக்கிச் செல்ல வேண்டும். முரண்பாடுகளை வளர்த்ததால் தான் இந்த நிலை வந்தது. இனியாவது முன்னோக்கிச் செல்வோம்.

பிள்ளைகளின் எதிர்காலம் பற்றி புதிதாக சிந்திப்போம். 10 வருடங்களில் இந்த நாட்டை சிங்கப்பூரை போல கட்டியெழுப்ப முடியும். அதற்கான பயணத்தில் ஒன்றிணைந்து செல்வோம். நாட்டின் வெற்றியை உறுதி செய்வோம்!" என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

---

# இனிப்பும் கசப்பும்



சட்டத்தரணி ஏ.எம்.வைஸ்

## கற்பிப்பது மற்றுமல்ல கவனமும் வேண்டும்

ஓரிரு வாரங்களுக்கு முன் கண்டியில் இனக் கலவரம் ஒன்று ஆரம்பமாகவிருந்து சில பிரமுகஉகளின் அயராத புத்திசாதுர்யமான முயற்சினால் இது தடைப்பட்டது. மாத்தனையிலிருந்து கண்டியை நோக்கி வந்துக் கொண்டிருந்த பஸ் வண்டியில் பயணம் செய்த ஒரு உலமா தான் அமர்ந்திருந்த ஆசனத்திற்க்கு முன் உள்ள ஆசனத்தில் அமர்ந்திருந்த ஒரு பெண்ணின் நீண்ட தலைமுடியை கத்தரித்து வேறாக்கியது தான் இச்சம்பமாகும். இது பற்றி வெளியிட்ட ஊடகங்களும் மௌலவி ஒரு சிங்களப் பெண்ணின் முடியை வெட்டி எடுத்ததாக செய்தி வெளியிட்டது. அந்த செய்தியின் படி அந்த நீண்ட முடியில் ஒரு அடி போன்று வெட்டி எடுக்கப்பட்டதாகக் கூறப்பட்டது. பஸ்ஸில் பயணம் செய்தோர் வெகுண்டெழுந்துள்ளனர். தாக்குதல்களும் இடம்பெற்றுள்ளதாகக் கூறப்படுகிறது.

சமாளிக்க முடியாத நிலையில் பஸ் வண்டி பொலிஸுக்கு திருப்பப்பட்டது. அந்த மௌலவி பொலிசாரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

அந்த மௌலவியின் புகைப்படத்தை சில ஊடகங்கள் பிரசூரித்திருந்தன. அவர் இஸ்லாமிய உடையுடன் தொப்பியும் அணிந்திருந்தார். அவர் ஒரு இளம் வயதினர். ஜுப்பா என்று எம்மவர் கூறும் உடையில் இருந்தார்.

பஸ்ஸினுள் ஏற்பட்ட கலகலப்பின்போது அந்த மௌலவி ஒரு வார்த்தையும் பேசவில்லை என்று கூறப்படுகிறது. அதற்கு காரணம் அவர் தவறை ஏற்றது தான் என்று சிலர் கூறினர். இன்னும் சிலர் அவருக்கு சிங்களமோ ஆங்கிலமோ தெரியாததே காரணம் என்றனர்.

எது எவ்வாறு எனினும் அந்த ஆண் உலமா என்பதும் சம்பவம் நடந்தது தான் என்பதும் உண்மை.

இந்த உலமா விளக்கமரியலில் இருந்தபோது முக ஆர்வாலர்களான சில சட்டத்தரணிகள் உண்மையறிந்த உதவ அங்கு சென்று குறிப்பிட்ட உலமாவை சந்தித்தனர். அவர்களது பார்வையில் சில விடயங்கள் தெரியவந்தன. அவருக்கு சிங்கள மொழி தெரியாது எதையும், பேசுறார் இல்லை மௌனமாகவே இருக்கிறார். முக்கியமாக மனநிலை சீராக இல்லை என்பதை நன்பு விளங்கிக் கொண்டனர். இந்த சீரற்ற மனநிலையிலேயே இந்த செயலை செய்திருக்கிறார் எனத் தெரிந்துள்ளது.

குறிப்பிட்ட பெண் ஒரு முஸ்லிம் பிரதேசத்தில் வாழ்வது தெரிய வந்ததும் அந்தப் பிரதேச பள்ளிவாசல் பிரமுகர்கள் அந்தப் பெண்ணின் வீடு சென்ற சமாதானப்படுத்தியதின் பின் இப்பிரச்சினையின் வேகம் குறைந்து விட்டது. தற்போது அடங்கிவிட்டது என்றே கூறலாம்.

இந்த உலமா இரண்டு மதிரஸாக்களில் படிக்கிறார். ஆனால் இறுதிவரை படித்து பட்டம் பெற்றதாக தெரியவில்லை. முதல் அரபுக் கல்லூரியிலிருந்து விலக்கக் காரணம். அதற்கு முன் பாடசாலைக் கல்வியைத் தொடராமைக்குக் காரணம் என்பது பற்றி சரியாக தெரியவில்லை. இதற்குக் காணரமும் சீரற்ற மனநிலையும் காரணமாக இருக்கலாம்.

இவரது மனநிலை பற்றி பரிசீலிக்க வைத்திய பரிசோதனைக்கு நீதிமன்றத்தில் வைக்கப்பட்டுள்ளது. இனவாதம் கக்கும் சில சமூக ஊடகத்தில் பெரிதாகக் காட்டின. இந்த மௌலவி கத்தரிக்கோலை எடுத்துச் சென்றுள்ளார்.

எனவே இது இவரது திட்டமிட்ட செயல் எனப் காட்டத் துணிந்தன. நீண்ட தலைமுடியை இழந்த பெண் பொறுத்துக் கொண்ட போதும் சில இனவாதிகளால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

அந்தப் பெண்ணும் ஒரு முஸ்லிம் கிராமத்தில் வாழ்வதால் பிரச்சினைக் கொள்லாமல் சமாளித்துக் கொள்ள முடிந்தது. அதைவிட அந்தக் கிராம பிரமுகர்களின் சிந்தனையும், செயற்பாடுகளும் உதவியது எனலாம்.

இவரது மனநிலை பாதிப்பு பற்றிய சிந்தனையை தேடி முன் வைத்தவர்கள் அந்த மௌலிவியை சந்திக்க விளக்கமறியலுக்கு சென்றது சட்டத்தரணிகளாவர். அவர்களையும் நான் பாராட்ட வேண்டும். எக்கேடு கெட்டால் எமக்கென்ன என்று அந்த கண்டி மாவட்ட முஸ்லிம் சட்டத்தரணிகள் சும்மா இருந்து விடவில்லை.

ஏனையவர்களுக்கும் ஒரு பொறுப்பு இருக்கின்றது. நாம் இந்த நாட்டில் வாழ்பவர்கள் இந்த நாட்டில் உத்தியோக மொழியும் பெரும்பாண்மையினர் பேசும் மொழியும் சிங்களம். எனவே, நாம் எமது பிள்ளைகளுக்கு சிங்கள மொழி அறிவினை ஊட்ட வேண்டும். சிங்களம் எழுதவும், பேசவும் கற்பிக்கவும் வேண்டும். ஆங்கிலம் பேச எழுத கற்பிப்பது போன்று அக்கரையுடன் சிங்கள மொழியையும் கற்பிக்க வேண்டும் அப்போது தான் அவர்களால் நல்ல முறையில் முகம் கொடுத்து வாழலாம்.

இதனை பெற்றோர் மட்டுமல்ல கல்விக்கூடங்களிலும் சிந்திக்க வேண்டும். பாடசாலைகள் மட்டுமல்ல மத்ரஸாக்களும் சிந்திக்க வேண்டும். அரபு தமிழுடன் சிங்கள மொழியையும் ஒரு பாடமாக ஆகக் வேண்டும். இதன் மூலம் மற்றைய இனத்தவருடன் நல்லெண்ணத்தை வளர்க்கலாம்.

பாடசாலைகளில் சிங்களம் ஒரு மொழியாக உள்ளது. எனினும் தெரிவு மொழியாக உள்ளது. சிங்களம் அல்லது ஆங்கிலத்தில் ஒன்றை தெரிவு செய்யம் உரிமை உண்டு. மத்ரஸாக்களில் அவ்வாறு இல்லை. ஏதோ தமிழை வீட்டில் பேசிப் படித்தால் தமிழ் பேசுகிறார்கள். எனவே சிங்கள மொழியில் வாசிக்க பேசவாவது கற்பிக்க வேண்டும்.

பாடசாலைகளில் மாத்திரமல்ல. மத்ரஸாக்களிலும் எல்லாக் கல்வி நிலையங்களிலும் மாணவர்களின் மனநிலை பற்றி அக்கரை எடுக்க வேண்டும். பாதிக்கப்படும்போது கண்டறிந்து வைத்தியம் பார்க்க வேண்டும். கற்பித்து சான்றிதழ் பெற்றுக் கொடுத்து விட்டால் சரி போதுமானது என்று நினைக்காவிட்டால் எதிர்காலம் பற்றியும் முன்னேற்றம் பற்றியும் சிந்திக்க வேண்டும்.



அரபாத் பஹுர்தீன்

# பத்திரனவின் வேகமும், நிசங்கவின் அதிரடியும் வீண்!

## இந்தியாவிடம் தோற்றுப் போனது இலங்கை

சுற்றுலா இந்திய அணிக்கு எதிரான 3 போட்டிகள் கொண்ட ரி20 தொடரின் முதல் போட்டியில் மதீஷ பத்திரனவின் வேகமும், பெத்தும் நிசங்கவின் அதிரடியும் வீண் போக 43 ஓட்டங்களால் இலங்கை அணி தோற்றுப் போக தொடரில் 1:0 என முன்னிலை பெற்றது இந்திய அணி.

இவ்விரு அணிகளுக்கும் இடையிலான 3 போட்டிகள் கொண்ட ரி20 தொடரின் முதல் போட்டி நேற்று இரவு 7 மணிக்கு கண்டி பல்லேகலே மைதானத்தில் ஆரம்பித்திருந்தது. இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணியின் தலைவரான சரித் அசலங்க முதலில் துடுப்பெடுத்தாடும் வாய்ப்பை இந்திய அணிக்கு கொடுத்திருந்தார்.

இதற்கமைய களம் நுழைந்த இந்திய அணியின் ஆரம்ப வீரர்களான ஜாய்வால் மற்றும் சுப்மன் கில் ஜோடி அதிரடி ஆரம்பத்தைக் கொடுத்து 6 ஓவர்களில் 74 ஓட்டங்களை விளாசியிருக்க கில் 34 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க அடுத்த ஓவரின் முதல் பந்தில் ஜாய்வால் 40 ஓட்டங்களுடன் பெலியன் திரும்பினார். பின்னர் வந்த அணித்தலைரான சூரியகுமார் யாதவ் ஆரம்பம் முதலே அதிரடி காட்டி இலங்கை பந்துவீச்சாளர்களை தும்சம் செய்ததுடன் அரைச்சதம் கடந்தும் அசத்தினார். பின்னர் இந்திய அணி 150 ஓட்டங்களை எட்டிப்பிடிக்க சூரியகுமார் யாதவ் 58 ஓட்டங்களுடன் பத்திரனவின் வேகத்தில் வெளியேறினார்.

எதிர்பார்க்கப்பட்ட ஹர்திக் பாண்டியா 9 ஓட்டங்களுடனும், ரயான் பராக் 7 ஓட்டங்களுடனும் பத்திரனவின் வேகத்தில் வெளியேற நிதானமாய் களத்தில் துடுப்பெடுத்தாடிய ரிஷப் பாண்ட் 49 ஓட்டங்களுடன் பத்திரவினால் போல்ட் செய்யப்பட்டு வெளியேற்றப்பட்டார். இறுதியில் இந்திய அணி 20 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 213 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. பந்துவீச்சில் மதீஷ பத்திரன 4 விக்கெட்டுக்களை அள்ளிச் சுருட்டினார்.

பின்னர் 214 என்ற கடும் சவால் மிக்க வெற்றி இலக்கினை நோக்கி பதிலுக்கு களம் நுழைந்த இலங்கை அணிக்கு ஆரம்ப ஜோடியான பெத்தும் நிசங்க மற்றும் குசல் மெண்டிஸ் ஆகியோர் அற்புதமான ஆரம்பத்தைக் கொடுத்தனர். இந்திய வேகங்களையும், சுழலையும் திணறடித்த இந்த ஜோடி 8.3 ஓவர்களில் 84 ஓட்டங்களை விளாசியிருக்க குசல் மெண்டிஸ் 45 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இருப்பினும் களத்திலிருந்த பெத்தும் அரைச்சதம் கடந்து மிரட்டி 79 ஓட்டங்களை பெற்றுக் கொடுத்து ஆட்டமிழந்தார். அச்சமயம் இலங்கை அணி 140 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து வெற்றியை அண்மித்திருந்தது.

சற்று நேரத்தில் 20 ஓட்டங்களுடன் குசல் பெரேரா வெளியேற இலங்கையின் வெற்றிக் கனவு கலைந்ததுடன் நம்பிக்கை மிக்க துடுப்பாட்ட வீரர்களான அசலங்க (0), தசுன் சானக்க (0), கமிந்து மெண்டிஸ் (12), வனிந்து ஹசரங்க (2) என வந்த வேகத்திலே பெவிலியன் திரும்பினர். பின்வரிசைப் பந்துீச்சாளர்களான தீக்சன (2), பத்திரன (6) மற்றும் மதுஷங்க டக் அவுட் ஆக இலங்கை அணி 19.2 ஓர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 170 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் கொண்டமையால் 43 ஓட்டங்களால் தோற்றுப் போனது.

இதனால் இந்திய அணி தொடரில் 1:0 என முன்னிலை பெற்றுள்ளது. பந்துவீச்சில் ரயான் பராக் 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். குறிப்பாக இலங்கை அணி இறுதியில் வெறும் 30 ஓட்டங்களுக்கு இறுதி 8 விக்கெட்டுக்களை இழந்து இலட்சக்கணக்கான ரசிகர்களின் சோகங்களுக்கு காரணமாய் மாறியது. இவ்விரு அணிகளுக்கும் இடையிலான 2ஆவது ரி20 போட்டி இன்று (28) இரவு 7 மணிக்கு பல்லேகலே மைதானத்தில் இடம்பெறள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தாருல் தவ்ஹீத் அஸ்ஸலபிய்யா கலாபீட இல்ல விளையாட்டுப் போட்டி - 2024



(எம்.ஏ.ஏ.அக்தார்)

தாருத் தவ்ஹீத் அஸ்ஸலபிய்யாக் கலாபீடத்தில் 2024 ஆம் ஆண்டிற்கான இல்ல விளையாட்டுப் போட்டி நேற்று (25) ஸலயிய்யா வளாக மைதானத்தில் இடம்பெற்றது.

அல் இத்திஹாத், அந் நஸ்ர், அல் ஹிலால் என மூன்று இல்லங்களாக மாணவர்கள் பல்வேறு போட்டி நிகழ்ச்சிகளில் ஆர்வமாகப் பங்கு பற்றி தமது திறமைகளை வெளிப்படுத்தினர்.

மஃஹத் நிர்வாகத்தின் அழைப்பை ஏற்று பதக்கமும் கிண்ணமும் வழங்கும் இறுதி நிகழ்வில் தாஇராவின் நிர்வாகமும் சில அங்கத்தவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

முதலாம் இடத்தை அல் இத்திஹாத் இல்லமும், இரண்டாம் இடத்தை அல் நஸ்ர் இல்லமும், மூன்றாம் இடத்தை அல் ஹிலால் இல்லமும் பெற்றுக் கொண்டன.

இப் பத்திரிகையானது (மின்னிதழ்) Moon Media Network நிறுவனத்தினால் 41/2, விஜித வீதி, நதிமால, தெஹிவளை எனும் முகவரியில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.